பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா.7.00

சங்கு 05 வள்ளுவர் ஆண்டு 2035 மாசி 29 வியாழக்கிழமை (11-03-2004) தொலைபேசி - 2223378 ஒலி 83

ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

## மட்டக்களப்பில் புலிகளின் பகுதியில் கண்காணிப்புக் குழுவின் பணி நிறுத்தம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் போர் நிறுத்தக் கண்காணிப்புப் பணிகளை [illegible]ங்கை போர் நிறுத்தக் கண்[illegible]ணிப்புக் குழு இடைநிறுத்தியுள்ளது.

அப்பிரதேசத்தில் விடுதலைப் புலிகளின் அமைப்புக்குள் ஏற்பட்டுள்ள பிரச்சினை காரணமாகவே தாம் இப்பணியை இடை நிறுத்தியுள்ளதாக கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

போர் நிறுத்த உடன்படிக்கையில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனே கைச்சாத்திட்டுள்ளார். அவ் அமைப்பிலிருந்து பிரிந்து சென்றவருடன் தொடர்பு கொண்டு போர் நிறுத்தக் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடமுடியாது என மட்டக்களப்பு மாவட்ட தலைமைக் கண்காணிப்பாளரான சேர்.ஓகன்டகல் தெரிவித்தார்.

எனினும், மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் தமது பணிகள் முன்னெடுத்துச் செல்லப்படும் எனவும் அவர் மேலும் கூறினார்.

(12ஆம் பக்கம் பார்க்க)



நேற்று யாழ். விஜயம் செய்த எரிக்சொல்ஹெய்ம் இளம்பரிதியைச் சந்தித்தபோது...

# புலிகளின் உள்விவகாரங்களில் நோர்வே தலையிடமாட்டாது

## எரிக்சொல்ஹெய்ம் யாழ்ப்பாணத்தில் தெரிவிப்பு

(அலுவலக நிருபர்கள்)

**விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து முன்னாள் தளபதி கருணா வெளியேற்றப்பட்டமையும், அது தொடர்பான விவகாரமும் விடுதலைப் புலிகள் அமைப்பின் உள்விவகாரம். இதில் நோர்வேத்தரப்போ, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவோ எந்த நடவடிக்கையும் எடுக்கமுடியாது.**

**இவ்வாறு நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் நேற்று யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார்.**

வடபகுதிக்கு இரண்டுநாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்த எரிக்சொல் தலைமையிலான குழுவினர் குடாநாட்டின் பல இடங்களுக்குச் சென்று நிலைமைகளைப் பார்த்து விடயங்களைக் கேட்டறிந்துகொண்டனர்.

அரச அதிபர் செ.பத்மநாதன், யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பிரமுகர்கள், அரசார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகள் மற்றும் ஈ.பி.டி.பி. அமைப்பினர் எனப் பலரைச் சந்தித்து யாழ். குடாநாட்டு நிலைபரங்களைக் கேட்டறிந்துகொண்டனர்.

இவ்விஜயத்தின்போது, பத்திரிகையாளர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே எரிக்சொல் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மீண்டும் எப்போது சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகும் என்பதைத் தற்போதைய சூழ்நிலையில் கூற முடியாது.

எதிர்வரும் பொதுத் தேர்தல் இயல்பாகவும், சுதந்திரமாகவும் நடைபெறுவதற்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில், விடுதலைப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## எரிக்சொல்ஹெய்ம் இன்று தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

(கிளிநொச்சி)

நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் இன்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார்.

கிளிநொச்சியிலுள்ள அரசியல் துறை நடுவச்செயலகத்தில் முற்பகல் 10மணிக்கு இடம்பெறவுள்ள இச்சந்திப்பில். எதிர்வரும் பொதுத்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திரமான வாக்களிப்பை உருவாக்கிக் கொடுக்கவேண்டும்

### எரிக்சொலிடம் இளம்பரிதி கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் விடுதலைப் புலிகள் மக்களின் ஜனநாயக உரிமைகளுக்கு இடையூறாகச் செயற்படமாட்டார்கள் என்று யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி நோர்வேத் தரப்பிடம் உறுதியளித்துள்ளார்.

நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்த நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறை செயலகத்திற்கு விஜயம செய்து அங்கு புலிகளின் பிரமுகர்களுடன் பேச்சு நடத்தினார்.

இச்சந்திப்பின்போதே இளம்பரிதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் நோர்வேத் தரப்பினருக்கு மேலும் விளக்கிக் கூறுகையில்;

அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகி இரு வருடங்கள் நிறைவடைந்துள்ளன.

(12ஆம் பக்கம் பார்க்க)

### மூன்றில் இரண்டு பெரும்பான்மையை ஒருபோதும் பெற முடியாது

## அரசியல் யாப்புச் சபை மூலமே இனப்பிரச்சினைக்கு தீர்வு காணலாம்

### டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கைப் பாராளுமன்றத்தில் எந்தவொரு அரசியல் கட்சியும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை. ஒருபோதும் பெறமுடியாது. எனவே, இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படவேண்டுமாயின் அரசியல் யாப்பு நிர்ணய சபையை உருவாக்கி அதன்மூலம் தீர்வுகாண்பதே ஒரேவழியாகும். இவ்வாறு ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நேற்றையதினம் கட்சியின்

(12ஆம் பக்கம் பார்க்க)

## எரிக்சொல் – டக்ளஸ் நேற்று யாழில் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு நேற்று வருகைதந்த நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் ஈ.பி.டி.பியின் யாழ். அலுவலகத்திற்கு விஜயம் செய்து கட்சியின் செயலாளர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான குழுவினரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

எதிர்வரும் பொதுத்தேர்தல் தொடர்பாகவும், பிரசார நடவடிக்

(12ஆம் பக்கம் பார்க்க)



ஜனநாயகம், பன்மைத்துவம், மனித நேயம் மலர...
அச்சம், சந்தேகம், வீண் பீதிகள் அகல...

வீணைக்கு வாக்களியுங்கள்!
வெற்றியை உங்களுடையதாக்குங்கள்!!



X

(சி-7422)

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)

## சிறு விளம்பரம்

### மணமகன் தேவை

யாழ் இந்து கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த 1962ஆம் ஆண்டு பூச நட்சத்திரம் கனடாவில் தொழில் புரியும் மணமகளுக்கு உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் வசிக்கும் நற்குணமுள்ள படித்த மணமகன் தேவை. ஜாதகம், புகைப்படத்துடன் தொடர்பு கொள்ளவும். வலம்புரி இல.360, C/O வலம்புரி, 15, வெள்ளாந்தெரு, வண்ணார் பண்ணை.

(C/7381)


# பல்கலைக்கழக மாணவர்களுக்கு அரசியல் வழி நடத்தல் அவசியம்

## திறந்த பல்கலைக்கழக விரிவுரையாளர் கருத்து

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர்களுக்குச் சரியான அரசியல் வழி நடத்தல் இன்மையால் அரசியல் கட்சிகளின் உள் நோக்கங்களை அறியாமல் அக்கட்சிகளை மாணவர்கள் ஆதரித்து வருகின்றனர். ஒரு சில நன்மையான விடயங்களுக்காக இவ்வாறு மாணவர்கள் தமது அரசியல் கொள்கைகளைத் திசை திருப்பிக் கொள்வது எதிர் காலத்தில் வன்முறைகளைத் தூண்டுவதற்குக் காரணமாகிவிடும். இவ்வாறு திறந்த பல்கலைக் கழகத்தின் விரிவுரையாளரான பேராசிரியர் ரிராஜேந்திர் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தால் நடத்தப்பட்டு வரும் விடியும் வேளை நிகழ்ச்சித் தொடரில் கலந்துகொண்டு "அரசியலில் மாணவர்களின் பங்களிப்பு" என்ற விடயம் பற்றிக் கருத்துரை வழங்கிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அவர் மாணவர்கள் அரசியலில் பிரவேசிப்பது என்பது 18 வயதிற்கு மேற்பட்ட வயதுப் பருவத்திலேயே ஆரம்பிக்கிறது.

இதிலும் அதிகமானவர்கள் தம் பல்கலைக்கழகப் பருவத்திலேயே அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்குகின்றனர். இவ்வாறு அரசியலில் ஈடுபடுகிறார்கள் என்பதை விட அரசியல் வாதிகளால் இவர்கள் கவனயீர்ப்புச் செய்யப்படுகிறார்கள். இதனால் மாணவர்களின் மனதில் அரசியல் பற்றிய விழிப்புணர்வு அவசியம். கட்சிக்காரர்களின் பிரசாரங்கள் உட்பட கவனயீர்ப்பு நடவடிக்கைகளை மாணவர்கள் சரியான முறையில் அணுக வேண்டும். அத்துடன் மாணவர்கள் ஒரு கட்சியை ஆதரிக்கும் போது அக்கட்சியின் கொள்கை என்ன? அக் கொள்கையால் சமுதாயத்தில் ஏற்படக் கூடிய சாதக பாதக விளைவுகள் என்ன? என்பது பற்றி நன்றாக அறிந்த பின்பே அக்கட்சிக்கான தமது ஆதரவை வழங்க வேண்டும்.

மாறாக சமுதாயத்திற்கு ஏற்புடையதல்லாத முரண்பட்ட கொள்கைகளையுடைய அரசியல் கட்சிகளுக்குத் தமது ஆதரவை மாணவர்கள் வழங்குவதால் சமுகத்தில் வன்முறைக் கலாசாரம் தலைதூக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் உண்டு.

எனவே மாணவர்களுக்கு அடிப்படையிலிருந்தே அரசியல் அறிவு பேணி வளக்கப்பட வேண்டும். மாணவர்களாகிய நாம் எதையும் செய்து விடலாம் என்ற தலைக் கனத்தில் தவறான பாதைகளில் சென்றுவிடக்கூடாது.ஒரு சில நன்மைகளுக்காகவும் குறுகிய நோக்கங்களுக்காகவும் அரசியலைப் பயன்படுத்த மாணவர்கள் முயல்வது ஏற்கமுடியாத ஒரு விடயம். இன்றைய நிலையில மாணவர்கள பன் உணர்வு பூர்வ வார்த்தைகளுக்கு திசைதிருப்பப்படுவதால் பல்வேறு சமூகப் பிரச்சினைகள் உருவாகும் அபாயமுள்ளது.

எனவேதான் ஐக்கிய நாடுகள் சாசனத்தில் கூட இளைஞர்களுக்கு அரசியல் விழிப்புணர்வு அடிப்படையில் இருந்து பயிற்றப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.இவ் விழிப்புணர்வு என்பது எமது நாட்டில் மிகவும் அவசியமானதாகக் காணப்படுகிறது. இதனால் நம் நாட்டு மாணவர்கள் அடிப்படையில் இருந்தே அரசியல் அறிவைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

அரசியல் அறிவென்பது எவராலும் புகட்டப்பட்டு வருவதில்லை. மாணவர்கள் தாமாகவே இவ் அரசியல் அறிவைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இதற்கு ஊடகங்களும் சமூக நிறுவனங்களும் உதவியாக அமைய வேண்டும். இதனை மாணவர்கள் சரியான முறையில் பயன்படுத்த வேண்டும். இதனூடாக அரசியல் பற்றிய அடிப்படை அறிவுடன் நோக்கியான அரசியல் கொள்கைகளையும் மாணவர்கள் உருவாக்கிக் கொள்ள முடியும்.

மாறாக ஆதிக்கத்திலுள்ள அரசியல் வாதிகளின் கருத்துக்கள் மட்டும் மாணவர்களைச் சென்றடைவதால் மாற்றுக் கருத்துக்களை மாணவர்கள் அறியாத நிலை ஏற்படுகிறது இது மாணவர்கள் அறியாத நிலை ஏற்படுகிறது. இது முற்றிலும் தவறானது.

எனவே மாணவர்கள் அரசியலில் ஈடுபடும்போது சமூக நலனை நோக்காகக் கொண்டு உணர்வு பூர்வ வார்த்தைகளுக்கு அடிமைப் பட்டுவிடாது அறிவுபூர்வமாகச் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும் என்றார். (தி-64,60,4)

# "அம்மா நலமா" திரைப்படம் பல்கலையில் வெளியீடு

(திருநெல்வேலி)

"அம்மா நலமா" என்ற திரைப்பட வெளியீட்டு விழா நேற்று முன்தினம் யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

நிதர்சனம் திரைப்பட வெளியீட்டுப் பிரிவைச் சேர்ந்த வீரா தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், தமிழீழத் தேசியக் கொடியினை யாழ்.மாவட்ட நிதர்சனப் பொறுப்பாளர் அப்பன் ஏற்றினார். மாவீரர் ஈழப்பிரியாவின் தந்தை பொதுச்சுடரினை ஏற்றினார்.

வரவேற்புரையினை தமிழீழத் திரைப்படப் பொறுப்பாளர் ராதை நிகழ்த்தினார். இந்நிகழ்வில் விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை, யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி உட்பட பல முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் திரைப்படத்தின் முதற்பிரதியினை யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் மாவை சேனாதிராஜாவுக்கு வழங்கினார். தொடர்ந்து மதிப்பீட்டுரையினை எழுத்தாளர் சாந்தன் நிகழ்த்தினார். (ச-43)

# தனித்து நின்ற பெண்ணால் யாழ். நகரில் பரபரப்பு

(கந்தர்மடம்)

யாழ்.மத்திய பேருந்து தரிப்பிடத்தில் நீண்ட நேரமாகத் தனித்து நின்ற பெண்ணால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த திங்களன்று இடம்பெற்ற இச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

சம்பவ தினத்தன்று காலை முதல் இரவு 8.30மணிவரை மேற்படி பஸ்தரிப்பு நிலையத்தில் இளம்பெண் ஒருவர் தனித்து நின்றுள்ளார். காரணமேதுமின்றி தனியே நின்றிருந்த இவ் இளம்பெண்ணைப் பலர் சூழ்ந்து விசாரித்த போதும் அப்பெண் பதிலேதும் தெரிவிக்கவில்லை.

இதனால் அப்பகுதியில் அப்பெண்குறித்து பரபரப்பு ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து மக்களால் யாழ்.பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலைத் தொடர்ந்து அங்கு சென்ற பொலிஸார் தனித்து நின்ற பெண்ணிடம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

எனினும்,பொலிஸாராலும் இவர் பற்றிய முழு விபரங்களையும் அறியமுடியவில்லை எனத் தெரியவருகிறது. (தி-96)

# நாடாளுமன்றத்தில் குடியரசுத் தலைவர் உரை உச்சநீதிமன்றத்தில் மனுத்தாக்கல்

நாடாளுமன்றத்தின் முதல் கூட்டத் தொடரைக் குடியரசுத் தலைவரின் உரையில்லாமல் கூட்டமுடியுமா என்பதற்குப் பதிலளிக்குமாறு உச்சநீதிமன்றம் மத்திய அரசுக்கு உத்தரவிட்டுள்ளது.

இந்தியக் குடியரசுக் கட்சித் தலைவர் ராம்தாஸ் அத்வாலே இது சம்பந்தமாக உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த ஒரு மனுவை விசாரித்த தலைமை நீதிபதி வி.என்.ஹாரே தலைமையிலான 'பெஞ்ச்' இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

நாடாளுமன்றத்தின் முதல் கூட்டத் தொடரில் குடியரசுத் தலைவர் உரையாற்றவில்லை. ஆதலால் இந்தக் கூட்டத் தொடரில் மேற்கொள்ளப்பட்ட அவை நடவடிக்கைகள் சட்டவிரோதமானவை என அறிவிக்க வேண்டும் என்று அத்வாலே தமது மனுவில் தெரிவித்திருந்தார்.

இந்த மனுவை விசாரித்த உச்சநீதிமன்ற பெஞ்ச் இதற்குப் பதில் மனுத்தாக்கல் செய்யுமாறு மத்திய அரசுக்கு உத்தரவிட்டது. (து)

# பா.ஜ.கவின் வெற்றிவாய்ப்பு பற்றி வெங்கைய நாயுடு

நாடு முழுவதும் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு ஆதரவான அலைவீசுவதால் வரும் மக்களவைத் தேர்தலில் அக்கூட்டணி பெரும்பான்மைப் பலத்துடன் வெற்றிபெறும் என்று பாரதீஜ ஜனதாக் கட்சித் தலைவர் வெங்கைய நாயுடு கூறியிருக்கிறார்.

விஜயவாடாவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வாஜ்பாயின் சிறப்பான ஆட்சி, நிலையான அரசு பாரதீஜ ஜனதாவுக்கு மாற்றுக்கட்சி இல்லையென்ற நிலை ஆகிய மூன்று காரணங்களே ஆதரவுஅலைவீசக் காரணம் என்று குறிப்பிட்டார்.

தேசியக் கட்சியாக இருந்த காங்கிரஸ், தற்பொழுது இடது சாரி மற்றும் சிறிய மாநிலக் கட்சிகளின் ஆதரவோடு சேர்ந்து போட்டியிடும் நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதாக வெங்கைய நாயுடு கூறினார்.

தென் மாநிலங்களில் கர்நாடகத்தில் பா.ஜ.க. ஆட்சி அமைக்கும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார். உத்தரப் பிரதேசத்தில் மூன்றில் இரண்டு பங்கு இடங்களை பா.ஜ.க. கைப்பற்றும் என்றும் நாயுடு குறிப்பிட்டார். (து)

# ஆர்.எஸ்.எஸ்.இன் கொள்கைகளுக்கு பா.ஜ.க. மதிப்பளிக்கிறது–இல.கணேசன்

(கோயம்புத்தூர்)

பாரதிய ஜனதாக்கட்சி ஆர்.எஸ்.எஸ். அமைப்புக்கு உரிய மரியாதை அளிக்கும் என்று அகில இந்திய செயலாளர் இல.கணேசன் கூறியிருக்கிறார்.

கோயம்புத்தூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் தி.மு.க., ம.தி.மு.க. பெரியாரின் கொள்கைகளுக்கு மதிப்பளிப்பது போல ஆர்.எஸ்.எஸ் இன் கொள்கைகளுக்கு பா.ஜ.க. மதிப்பளிக்கிறது என்றார்.

மக்களவைத் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான ஜனநாயக முற்போக்கு கூட்டணியில் இடம்பெற்றுள்ள கட்சிகளின் இரட்டை நிலையையும், சந்தர்ப்பவாத கூட்டணியாக அது அமைந்துள்ளதையும் பா.ஜ.க-அ.இ.அ.தி.மு.க. கூட்டணி மக்களுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டும் என்றார். (து)

## இந்தியச் செய்திகள்

# அயோத்தி மசூதி இடிப்பு திட்டமிட்ட செயல் என்கிறது முஸ்லிம் காங்கிரஸ் சட்டவாரியம்

அயோத்தியில் சர்ச்சைக்குரிய கட்டடம் தகர்க்கப்பட்ட சம்பவத்திற்கு அப்போதைய காங்கிரஸ் அரசை அகில இந்திய முஸ்லிம் காங்கிரஸ் தனிநபர் சட்டவாரியம் குறை கூறியிருக்கின்றது.

அரசியல் இலாபங்களுக்காக நரசிம்மராவ் தலைமையிலான காங்கிரஸ் அரசு அரசியல் சாசனக் கடமைகளை செய்யத்தவறியதால், சர்ச்சைக்குரிய கட்டடம் தகர்க்கும் நிலை ஏற்பட்டது என்று, இந்தச் சம்பவம் பற்றி விசாரித்து வரும் லெபரான் கமிஷன் முன்பு முஸ்லிம் சட்டவாரியம் தாக்கல் செய்துள்ள மனுவில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்திற்கு உத்தரப் பிரதேச மாநிலத்தில் அப்போது ஆட்சியில் இருந்த கல்யாண்சிங் தலைமையிலான அரசையும் தனிநபர் சட்டவாரியம் குறைகூறியிருந்தது.

மத்திய, மாநில அரசுகள் உரிய நேரத்தில் நடவடிக்கை எடுத்திருந்தால், சர்ச்சைக்குரிய கட்டடம் இடிக்கப்படாமல் தடுத்திருக்க முடியும் என்று அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்ச்சைக்குரிய கட்டடம் ஆவேசத்தோடு வந்த ஒரு கும்பலால் தான் தகர்க்கப்பட்டது என்று கூறப்படுவதை மறுத்துள்ள சட்டவாரியம், இந்தச் சம்பவம் திட்டமிட்டுச் செய்யப்பட்ட நடவடிக்கை என்று குற்றஞ்சாட்டியிருக்கிறது. (து)

# அ.தி.மு.க. தேர்தல் அறிக்கைக்கு கலைஞர் கருணாநிதி கண்டனம்

ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் கூட்டம் தி.மு.க. தலைவர் கருணாநிதி தலைமையில் நடைபெற்றது. தி.மு.க.வின் பொதுச் செயலாளர் க.அன்பழகன், பொருளாளர் ஆர்காடு வீராசாமி, பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ், ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் ஆர்.நல்லக்கண்ணு மார்க்சிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் என்.வரதராஜன், தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியின் சார்பில் டி.சுதர்சனம் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

அ.இ.அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தி மற்றும் ஜனநாய முற்போக்குக் கூட்டணி பற்றிய விமர்சனம் சட்டவிரோதமானது என்றும், இது குறித்துத் தலைமைத் தேர்தல் ஆணையம் கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் வலியுறுத்தித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தேர்தல் ஆணையத்திடம் இது குறித்து நேரில் மனு அளிக்க இருப்பதாகவும் அவர் கூறினார்.

மங்களூர் சட்டப்பேரவைத் தொகுதியில் தி.மு.க. போட்டியிடும் என்றும் தீர்மானிக்கப்பட்டதாக தி.மு.க.தலைவர் கருணாநிதி பின்னர்செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (து)

# புதுவைப் பிரச்சினை சுமுகமாகத் தீர்ந்தது

புதுவை மக்களவைத் தொகுதியில் காங்கிரஸ் கட்சி தனது வேட்பாளரை நிறுத்துவது என்று அக்கட்சி திட்டவட்டமாக அறிவித்திருக்கிறது.

தமிழகத்தில் இருந்து மாநிலங்கள் அவை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக நடைபெறும் தேர்தலில் காங்கிரஸ் கட்சி வேட்பாளருக்கு ஆதரவு அளிப்பது என்று தி.மு.க.அளித்த உறுதி மொழியைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டதாகப் புதுடில்லியின் செய்தித் தொடர்பாளர் கபில்சிபல் தெரிவித்திருந்தார். தி.மு.க மற்றும் அதன் தோழமைக் கட்சிகள் அந்தமான், நிக்கோபா தீவுகளில் வேட்பாளர்களை நிறுத்த மாட்டாது என்று உறுதியளித்துத் திருப்பதாகவும் அவர் கூறினார். (கு)





நேற்று யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்த நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தலைமையிலான குழுவினர் யாழ். மாவட்ட ஆயரை அவரது இல்லத்தில் சந்தித்தபோது.

## விபத்து அபாயம்

மருதனார்மடம் சந்திப்பகுதிகளில் அடிக்கடி ஏற்படும் போக்குவரத்து நெரிசல்கள் காரணமாக அப்பகுதிகளில் வீதி விபத்துக்கள் ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளது.

மேற்படி பகுதியில் காணப்படும் நடைபாதை வியாபாரங்கள் மற்றும் வாடகை வாகனத் தரிப்புகள் என்பவற்றாலேயே இவ் வீதி நெரிசல் அப்பகுதிகளில் ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (122)

## இடமாற்றம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச சபையின் பிரதம இலிகிதர் எஸ்.பரமேஸ்வரன் வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

பருத்தித்துறைப் பிரதேச சபையின் புதிய பிரதம இலிகிதராக எஸ்.செவ்வேள் தற்போது நியமிக்கப்பட்டுள்ளார்.

(தி-52)

## ஓய்வூதியர் கவனத்திற்கு

வலி. கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட. ஓய்வூதியர்கள் அனைவரும் தங்கள் பிரிவுக் கிராம அலுவலருடன் தொடர்பு கொண்டு விண்ணப்பங்களைப் பெற்று பூர்த்தி செய்து ஓய்வூதிய அடையாள அட்டையுடன் பிரதேச செயலகத்திற்கு நேரடியாக சமூகமளித்து தங்களுடைய மார்ச் மாத ஓய்வூதிய உறுதிச்சீட்டுக்களை பெற்றுக்கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

வலி.கிழக்கு பிரதேச செயலர்.

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பொதுத் தேர்தலுடன் தொடர்புடையவடபிராந்திய போக்குவரத்துச சபை. யாழ். ரெலிக்கொம் நிறுவனம், மின்சாரசபை. பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் தலைவர்களுக்கான கூட்டமொன்று நாளை வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது. (தி-19)

## கோட்டமட்ட விளையாட்டுப்போட்டி

(பொன்னாலை)

கோப்பாய் கல்விக்கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான கோட்டமட்ட விளையாட்டுப் போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமையும் மறுநாள் சனிக்கிழமையும் நடைபெறவுள்ளது. (தி-49,79)





சங்குநாதம்

வன்முறைகோலோச்சும் பாராளுமன்றத் தேர்தல் —விதுரன்

அடிக்கடி கடிபடும் அக்காவும் தம்பியும் —வித்தகன்

பின்லேடன் பிடிபட்டாரா? பரபரப்பின் பின்னணி என்ன?

வாழ்வை வளம்படுத்த துரைமுருகர் எழுதும்

எண் சோதிடம்

கே.வி.குணசேகரம் எழுதும்

கல்தூண்கள் (தொடர்கதை)

விமாசரின் பதில்கள் ஆலடி மாநாடு

சினிமாச்சித்திரம்

மற்றும் பல அம்சங்களுடன் வாசிக்கத் தவறாதீர்கள்

வெள்ளி வைகறையில் உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது

சங்குநாதம்



பாராளுமன்றப் பொதுத்தேர்தல் யாழ். மாவட்டம் 2004

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

தமிழ்த் தேசிய இனத்தின் தாயகம், தேசியம், தன்னாட்சியுரிமை (சுயநிர்ணய உரிமை) ஆகிய மூலாதாரக் கோரிக்கைகளைஏற்று அவற்றின் அடிப்படையில் தமிழ்த்தேசியப் பிரச்சினைக்கு அரசியல்தீர்வு காணுவோம்



திரு. கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)

இல 5



திரு. சி. வீ. கே. சிவஞானம்

(முன்னாள் யாழ். மாநகரசபை ஆணையாளர்)

இல 9

இலங்கைத் தமிழரசுக் கட்சி

## இன்று ஒரு தகவல்

# ஞானமார்க்கம்

ஒரு காட்டில் மரத்தடியின் கீழ் ஒரு ஞானி உட்கார்ந் திருக்கிறார். அந்தப்பக்கமாக தினமும் ஒருவன் வந்து விறகு வெட்டிக்கொண்டு செலவான். தினமும் வந்து விறகு வெட்டுவது, அதை விற்பது என்று அந்த வருமானத்தை வைத்துப் பிழைத்துக்கொண்டிருந்தான. தினமும் இதைக் கவனித்தார் அந்த ஞானி.

"இதோ பாரப்பா. மரம் வெட்டுவதிலேயே உன் வாழ்நாளை வீணாக்காதே. இன்னும் கொஞ்சத்தூரம் காட்டின் உள்ளே முன்னேறிப் போ. ஒரு செம்புச்சுரங்கம் அங்கே உள்ளது. அதில் ஒருநாள் வேலை செய்தால் ஒருவ்ாரத்திற்குக் கவலை யிருக்காது. அங்கே போ" என்றார். அவனுக்கு நம்பிக்கை வரவில்லை. யோசனை செய்தான். இந்த ஞானி எப்போதும் இந்த மரத்தின் கீழ் கண்ணை மூடிக்கொண்டிருக்கிறார். இவருக்கு எப்படி அங்கே சுரங்கம் இருப்பது தெரியும்? என்று நினைத்தான். இருந்தாலும் போய்த்தான் பார்ப்போமே என்று சென்று பார்த்தான்.

சிறிது தூரம் போனதும் அவர் கூறியது போலவே செம்புச் சுரங்கம் இருந்தது. அதில் வேலை செய்ய ஆரம்பித்தான். வாரத்தில் ஒருநாள் வேலைசெய்தால் போதும். மற்றைய நாட்களில் வேலைசெய்ய அவசியமே இல்லை. குடும்பத்தையும் நன்கு கவனிக்கமுடிந்தது. வரும் விருந்தினர்களையும் நன்கு கவனிக்க முடிந்தது.

மறுபடியும் அந்த ஞானி அவனைக் கூப்பிட்டார். "என்ன இது நீ இன்னும் விபரம் புரியாமல் இருக்கிறாய். இன்னும் கொஞ்சம் முன்னேறிப் போ. அங்கே ஒரு வெள்ளிச் சுரங்கம் உளளது. அங்கே நீ ஒரு நாள் வேலை செய்தால் போதும். ஆறு மாதத்திற்கு வேலை செய்யவேண்டிய அவசியமே இல்லை" என்றார். இதையும் அவன் முதலில் நம்பவில்லை. இருந்தாலும் போய்ப்பார்ப்போம் என்று போனான்.

அங்கு நிஜமாகவே ஒரு வெள்ளிச் சுரங்கம் அதில் ஒரு நாள் வேலை செய்வான். அதைக்கொண்டு ஆறுமாதத்திற்கு ஆடம்பரமாக வாழ்க்கை நடத்துவான். மறுபடியும் ஒருநாள் ஞானியிடம் வந்தான். ஞானி கூறினார் "நீ இன்னும் சரியான விபரம் புரியாமல் இருக்கின்றாய். இன்னும் கொஞ்சத்தூரம் முன்னேறிப் போ ஒரு தங்கச்சுரங்கம் உன் கண்ணில் படும்" என்றார்.

ஆசை யாரை விட்டது? அங்கும் சென்று பார்த்தான். கொஞ்ச நாளில் பெரிய பணக்காரனாகிவிட்டான். செல்வம் நிறையச் சேர்ந்து விட்டது. இனி ஞானியைப்பற்றி நமக்கு என்ன கவலை! என்றிருந்துவிட்டான். அது மட்டுமில்லை அந்த ஞானியை விபரம் தெரியாத ஆள் என்று நினைத்து விட்டான். ஏனென்றால் இப்படி ஒரு தங்கச்சுரங்கம் இருப்பது தெரிந்தும் அந்த ஆள் கண்ணை மூடிக்கொண்டு மரத்தடியில் உட்கார்ந்தி ருக்கின்றாரே அவர் எப்படிப்பட்ட ஏமாளியாக இருக்கவேண்டும்? என்று நினைத்தான். அவரைச் சென்று பார்க்கவே இல்லை.

ஒருநாள் ஞானியே இவனைக் கூப்பிட்டார். " என்ன இது இப்படி இருந்து கொண்டாய்? எனக்கும் வயது போய்விட்டது. இனி உனக்காகக் காத்துக்கொண்டிருக்க முடியாது. இன்னும் கொஞ்சம் முன்னேறிப்போனால் வைரச்சுரங்கத்தையே பார்க் கலாம். நீ தங்கத்துடன் உன் நேரத்தை வீணாக்கிக் கொண்டி ருக்கிறாயே" என்றார்.

அவன் போய் வைரச் சுரங்கத்தையும் கண்டுபிடித்தான். நீண்டநாளாக வரவேயில்லை. ஞானி மணரப்படுக்கையில் இருந்தார். சொல்லியனுப்பினார் " உடனே வா உன்னிடம் கடைசி ரகசியத்தையும் கூறவேண்டியுள்ளது" என்று. இவனும் அவர் முன் சென்று நின்றான். வைரத்தை விடப் பெரிதாக என்ன இருந்துவிட முடியும். " இன்னும் கொஞ்சம் முன்னே றிப் போ என்று கூறப்போகின்றீர்களா?"என்று கேட்டான். ஆமாம். இன்னும் கொஞ்சம் முன்னோறிப்போனால் அள்ளக் குறையாத ஒரு பொக்கிஷம் உள்ளது. அதைப் பார்க்கலாம். வைரச் சுரங்கம் விரைவில் தீர்ந்து விடும்" என்றார். "இவ்வளவு தூரம் இது பற்றித்தெரிந்து வைத்துள்ள நீங்கள் இன்னமும் ஏன் மரத்தடியில் உட்கார்ந்திருக்கீன்றீர்கள்? என்றான். "அந்தப் பொக்கிஷம் எனக்குள் இருக்கிறது. அதற்குத்தான் உன் னைக் கூப்பிட்டேன்" என்றார்.

அவர்கூறியது மிகப் பெரிய விடயம். அவனால் அதை அப்போது புரிந்துகொள்ளமுடியவில்லை. அதன்பின் ஞானி இறந்து விட்டார். இவனுக்கும் வயசாகிவிட்டது. ஞானி கூறியது சரியாக இருக்குமோ என்று உணர்ந்தான். காட்டுக்குப்போய் கண்களை மூடிக்கொண்டு உட்கார்ந்தான். அந்தப் பொக்கி ஷத்தை அவன் கண்டுபிடித்துவிட்டான்.

நாம் இப்போதிருக்கும் சூழ்நிலையில் இது பைத்தியக் காரத்தனமாகத் தெரியலாம். அதனால் இதை இப்போது காதில் போட்டு வைத்துக்கொள்வோம். உபயோகப்படும் போது உபயோகப்படட்டும்.

நமது ஆள் ஒருவரைப் பார்த்து "உன்னிடம் ஒரு ஞானி வைரச் சுரங்கம் இருக்கும் இடத்தைக்காட்டினால் நீ என்ன செய்வாய் " என்று கேட்டேன். "முதலில் வழி காட்டியவரைத் தீர்த்துக்கட்டிவிடுவேன்" என்றான். அடப்பாவி! ஏன் அப்படிச் செய்வாய்? என்றேன். "அப்போது தான் எனக்குப்பின் இன்னொருவருக்கும் அவர் வழிகாட்டாமல் இருப்பார்" என்கிறான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# ஐக்கிய தேசிய முன்னணி அரசை தமிழ்மக்கள் இனி நம்பமாட்டார்கள்

## ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் சமாதான முயற்சிகளை உரிய முறையில் முன்னெடுத்துச் செல்ல வில்லை. இதனாலேயே தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளை இடைநிறுத்தியுள் ள்னர் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித் துள்ளார்.

இராகமையில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இத னைத் தெரிவித்தார். அவர் அங்கு தொடந்தும் உரை யாற்றுகையில்,

நான் பாதுகாப்பு, உள்துறை, மக்கள் தொடர்பாடல் ஆகிய அமைச்சுக்களைப் பொறுப்பேற்ற காரணத்தால் தான் சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்ல முடியாதிருந்ததாக ஐக்கிய தேசிய முன்னணி அரசாங் கம் குற்றஞ்சாட்டி வருகின்றது.

இந்தக் குற்றச்சாட்டு தவறானது. நான் அமைச்சுக் களைப் பொறுப்பேற்பதற்கு முன்னரே விடுதலைப் புலி கள் சமாதானப் பேச்சுவார்த்தைகளை இடைநிறுத்தியுள் ளனர்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் முறையாக சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லா தமையே விடுதலைப்புலிகள் பேச்சுக்களை இடை நிறுத் திக்கொள்ளக் காரணமாக இருந்தது.

இது ஒருபுறமிருக்க தமிழ்பேசும் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுத் தருவதாக பொய் உறுதிமொழி களைக் கூறி ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசிய முன் னணி அரசு அம்மக் களை ஏமாற்றிவிட் டது.



தறபோது தமிழ்பேசும் மக்களை ஏமாற்றி அவர் களின் வாக்குகளைப் பெறுவதற்கு ஐக்கிய தேசிய முன்னணி முயற் சிக்கின்றது.

ஆனால், தமிழ்பேசும் மக்கள் ஐக்கிய தேசிய முன்னணியின் வாக்குறுதிகளை இம்முறை நம்ப மாட்டார்கள் என்றே எதிர்பார்க்கின்றேன்.

இதேவேளை, நான் பாராளுமன்றைக் கலைத்து பொதுத் தேர்தலுக்கு உத்தரவிட்டமை குறித்து மக்கள் எவரும் வீணாகக் குழம்பத் தேவை யில்லை. நாட்டு மக்களின் நலன் கருதியே நான் அவ்வாறு செய்தேன். அத்துடன், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சிக்கு வந்தால் சமாதான நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லும் என்றார்.

(தி-61,10)

# நிரந்தர அரசு அமைப்பதே எமது பிரதான நோக்கம்

## எல்லாவெல மேதானந்த தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் சுபீட்சமான தார்மீக அரசு ஒன்றை உருவாக் குவதே தமது பிரதான நோக்கம் என எல்லாவெல மேதானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

ஹெல உறுமயக் கட்சியினால் ஒழுங்கு செய் யப்பட்ட தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இத னைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

நாட்டில் சுபீட்சமான தார்மீக அரசு ஒன்றை உரு வாக்குவதற்காகவே பௌத்த குருமார்கள் தேர்த லில் போட்டியிடவுள்ளனர். எனவே, இதனை எவ ரும் தவறாகக் கருதக் கூடாது.

"பௌத்த குருமார்கள் நாட்டையும் இனத்தையும் பற்றி எள்ளளவேனும் சிந்திப்பதில்லை" என சிலர் குறை கூறுகின்றனர். சிலர் பௌத்த பிக்குகள் அரசியலில் இறங்கி பௌத்த மதத்திற்கே இழிவை ஏற்படுத்துவதாக குற்றஞ்சாட்டுகின்றார் கள்.

உண்மையிலேயே நாங்கள் சுய அரசியல் இலாபங்களைப் பெறுவதற்காக அரசியலில் இறங்கவில்லை. எமது மதத்தையும் இனத்தையும் காப்பாற்றி நாட்டை சுபீட்சமான பாதைக்கு இட் டுச் செல்வதற்காகவே தேர்தலில் போட்டியிடவுள் ளோம்.

மதத்திற்காக மட்டும் உழைக்காது மக்களுக் காகவும் உழைக்கவேண்டும் இதுதான் எமது நிலைப்பாடு. நாம் கிடைப்பதை உண்டு கழித்து மரணிப்பதை விட்டுவிட்டு நல்லதை நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் செய்துவிட்டு மரணிப்பது மேலானது.

எனவே, நாம் தேர்தலில் போட்டியிடுவதை எவரும் தவறாகக் கருதக்கூடாது. நாம் சமாதான நடவடிக்கைகளுக்கு தொடர்ந்தும் ஆதரவு வழங்கு வோம். மீண்டுமோர் போர் இடம்பெற இடமளிக்க மாட்டோம்.

எமது நாட்டில் உள்ள சகல இன மக்களும் ஒற் றுமையாகவும் சந்தோஷமாகவும் வாழவேண்டும். இதுதான் எமது ஆசை. இன, மத பேதங்கள் எவரிடத்திலும் இருக்கக் கூடாது என்றார்.

(தி-60,10)

## இராசி பலன்

11. 03. 2004

(மாசி 28, வியாழக்கிழமை)

| | |
|---|---|
| பஞ்சமி முன்னிரவு 9.56 மணி வரை | |
| சுவாதி முற்பகல் | 9.10 மணி வரை |
| இராகுகாலம் | 1.52-3.22 மணிவரை |
| சுபநேரம் | 7.52-9.22மணிவரை |

*அமிர்த சித்தம்*

**மேடம்**
தடைப்பட்டகாரியம் கைகூடும், குடும்பத்தில் மகிழ்ச்சி, கீர்த்தி, அபூர்வசந்திப்பு.

**இடபம்**
தாய்வழிஉறவு, முயற்சி கைகூடும், ஆரோக் கியம், போசன சுகம்.

**மிதுனம்**
தொழில் விருத்தி, சிறுவியதி, முயற்சி தாமதம், பிரயாணம்.

**கடகம்**
ரோகபயம், எதிர்பாராத நன்மை, மாதா சுகம், கல்வியில் ஆர்வம்.

**சிங்கம**
கூட்டு முயற்சி, பிரயாண நன்மை, உறவினர் சந்திப்பு, செல்வாக்கு.

**கன்னி**
உணர்ச்சிவசப்படல், இடமாற்றம், தொழிலில் ஆர்வம், முயற்சி தாமதம்.

**துலாம்**
தேகநலன், அதிகபிரயாசை, நண்பர்கள் சந்திப்பு, திடீர் நன்மை.

**விருச்சிகம்**
சுப செலவு, பிரயாணம், கடின வார்த்தை, மனச்சஞ்சலம்.

**தனுசு**
காரிய நன்மை, போசன சுகம். உற்சாகம், கலந்துரையாடல்.

**மகரம்**
தொழில் நன்மை, நண்பர்கள் உதவி, கீர்த்தி, விருந்துபசாரம்.

**கும்பம**
சரீரப்பிரயாசை, கௌரவமான நிலை, கட்டுப்பாடு, காரிய தாமதம்.

**மீனம்**
அதிஷ்டக் குறைவு, கலகம், காரிய தாமதம், வாகன பயம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

## விஞ்ஞானக் கண்காட்சிப் போட்டி

## யாழ். இந்து மகளிர் கல்லூரியில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம் நடாத்தும் வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான விஞ்ஞானக் கண்காட்சிப் போட்டியானது இன்று வியாழக்கிழமை முதல் எதிர்வரும் சனிக் கிழமை வரை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் பங்குபற்றும் பாடசாலைகள் தமது கண்காட்சிப் பொருட்களை நாளை பிற் பகல் 2 மணியளவில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் ஒழுங்குபடுத்துமாறு கேட்டுக்கொள் ளப்பட்டுள்ளது.

அத்துடன், மேற்படி கண்காட்சிப் போட்டியில் அனைத்து மாணவர்களும் தவறாது ஆர்வத்து டன் பங்குபற்றி, தமது ஆக்கங்களைத் தந்துதவ வழமைபோன்று இம்முறையும் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களின் ஒத்துழைப்பு வேண்டப்பட்டுள்ளது. (உ)

# புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து வரும் வாக்காளர்களைப் பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின் தார்மீகக் கடமையாகும்

## சட்டத்தரணி கே.ஆர்.எம்.அப்துல் ரகீம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் வசிக்கும் வாக்காளர்களுக்கும் சுதந்திரமாக வாக்களிக்கும் உரிமையுண்டு. அவர்களின் வாக்குரிமைகள் பறிக்கப்படும் போது, அதற்குப் பாதுகாப்பு வழங்கவேண்டிய முழுப் பொறுப்பும் அரசாங்கத்தையே சாரும் என அடிப்படை மனித உரிமைகள் சட்டத்தரணி கே.ஆர்.எம். அப்துல்ரகீம் தெரிவித்துள்ளார்.**

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தால் நடத்தப்பட்டுவரும் விடியும் வேளை நிகழ்ச்சியில் கலந்துகொண்டு “இன முரண்பாடுகளும் தேர்தல் வன்முறைகளும்” எனும் தலைப்பிலான விடயங்கள் குறித்துத் தெளிவுபடுத்தியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்,

இலங்கையின் அரசியலமைப்புச் சட்டத்தின் 14வது உறுப்புரையின் பிரகாரம் ஒவ்வொரு பரஜைக்கும் வாக்களிக்கும் உரிமையுண்டு. இதனடிப்படையில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் வாழும் மக்களுக்கும் இவ் உரிமை உண்டு. எனவே, தமககுள்ள சட்டரீதியான உரிமைகளின் அடிப்படையில் அவர்கள் வாக்களிக்கலாம்.

இவ்வாறு வாக்களிப்பவர்களுக்கு பாதுகாப்பு வழங்குவது என்பது அரசாங்கத்தின் கடப்பாடாகக் காணப்படுகிறது, ஆனால இவ் வாக்கெடுப்புக்கள் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் நடத்தப்படும் பட்சத்தில், இத்தகைய பாதுகாப்பை வழங்குதல் என்பது நடைமுறைக்குச் சாத்தியம்அற்றதாகப் போய் விடுகிறது.

மாறாக, இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் வாக்களிப்பு இடம்பெறும்போது, அங்கு மக்களின் வாக்குரிமைகள் மீறப்படாது, காத்துக்கொள்ளுதல் அரசாங்கத்தினது பொறுப்பாகும். இவற்றை மீற முற்படுபவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள்மீது உரிய சட்ட நடவடிக்கைகளை எடுப்பதும் அரசின் தார்மீக கடமையாகும்.

இதேபோன்று தேர்தலில போட்டியிடும் வேடபாளர்களுக்கும் உரிய பாதுகாப்பை வழங்கவேண்டிய கடப்பாடு அரசுக்கு உண்டு. ஒரு வேட்பாளருக்கு பிரசாரகால எல்லைக்குள் பிரசார விதிமுறைகளுக்கு அமைவாக தோதல் பிரசாரங்கள் செய்ய உரிமையுண்டு.

இவ்வாறு தேர்தல் சட்ட விதிகளுக்கு அமைவாகப் பிரசாரம் செய்வோருக்கு உரிய பாதுகாப்பு பொலிஸாரால் வழங்கப்படவேண்டும். ஆனால் இத்தகைய சந்தர்பபங்களில் பொலிஸார் நடந்துகொள்ளும் செயற்பாட்டுத்திறன போதாதிருப்பதால் வேட்பாளர் படுகொலைகள், தாக்குதல்கள் எனப்பல சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

மக்களின் உரிமைகளைட் பேணும விதமாக அரசியல் அமைப்பின் பிரகாரம் பல சட்டங்கள் மற்றும் விதிமுறைகள் என்பன அமையப்பெற்றாலும், அவற்றை நடைமுறைப்படுத்துவதில் அரசிற்குப் பல சிக்கல்கள் உள்ளன. இதனால் அரசியல் அமைப்பின்படியும் சட்டத்தின்படியும் மக்களுக்கு உரிய பாதுகாப்பை அரசினால் வழங்க முடியாத சூழ்நிலை காணப்படுகிறது எனக் குறிப்பிட்டார்.

அத்துடன், இலங்கையின் அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி, பிரஜைகளுக்குள்ள உரிமைகள் தொடாபாக விளக்கமளித்த அவா,

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் கடந்த 2000ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட அதிகாரப் பரவலாககல் சட்டமூலம் அன்று எதிர்க்கட்சியாக இருந்த ஐக்கிய தேசியக் கட்சியினரால் நடாளுமன்றத்தில் வைத்தே கிளித்துத் தீ மூட்டப்பட்டது.

சிங்களவர், தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் அனைத்துப் பிரஜைகளினதும உரிமைகளைப் பேணும் விதமாக அமைந்த இச்சட்ட மூலம் அன்று எரிக்கப்பட்டதனால், இன ரீதியிலான சில உரிமை மீறல்கள் இன்றும் தொடர்ந்தவண்ணம் உள்ளன.

ஜனாதிபதியால் கொண்டுவரப்பட்ட இச்சட்டமூலம் அன்று நிராகரிக்கப்பட்டமை இலங்கை மக்களுக்கு ஏற்பட்ட துரதிஷ்டவசமான சம்பவம். எனினும், ஜனாதிபதி சந்திரிகா எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும ஆட்சியமைத்தால் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் மீண்டும் இச் சட்டமூலத்தை சட்டமாக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் அதிகம் உண்டு.

இச் சட்டமூலம் சட்டமாக்கப்படுவதால் மூவின மக்களதும் வாழ்வுரிமைகள் பாதுகாக்கப்பட்டு சம நிலை பேணப்படும்.

இச் சட்டமூலம் இதுவரை நிறைவேற்றப்படாததால் நாட்டில் பல அடிப்படை உரிமைமீறல் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

தனி நபர் துஷ்பிரயோகங்கள், பாதுகாபபுக் கெடுபிடிகள் காரணத்தை கூறாது கைதுசெய்தல் எனப்பல உரிமைமீறல்கள் இங்கு காணப் படுகின்றன என்றார்.

(60,4)





சர்வதேச மகளிர் தினத்தன்று அரசசார்பற்ற நிறுவனங்கள், மற்றும் பொது நிறுவனங்கள ஒன்றிணைந்து நடத்திய அணிவகுப்பினை படங்களில் காணலாம்.

# வடக்கு-கிழக்கை பிரிப்பதா? இல்லையா?

## கருத்துக்கணிப்பு நடத்தக் கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கை பிரிக்க வேண்டுமா? இல்லையா? என அறிவதர்காக ஒரு கருத்துக் கணிப்பொன்றை கிழக்கு மாகாணத்தில் நடாத்த வேண்டும். அதுவும் பொதுத் தேர்தல் தினத்தன்றே நடத்த வேண்டுமென இலங்கை முஸ்லிம் அமைப்பு ஜனாதிபதியையும், பிரதமரையும் கேட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தின் பெரும்பாலான மக்கள் கிழக்கு மாகாணம சுயாதீனமாக்கப்படவேண்டும். என்றே விரும்புகிறார்கள். இவ்வாறு சுயாதீனமாக்கப்படின் முஸ்லிம்கள் சந்தோசமடைவார்கள். கிழக்கு மாகாணததில் 40.1 சதவீதமான முஸ்லிம்கள் உள்ளார்கள். இதில் திகாமடுல்லவில் 41.58 சதவீதத்தினரும் திருகோணமலையில் 40.19 சதவீதத்தினரும் மட்டக்களப்பில் 36.13 சதவீதத்தினரும் உள்ளனர்.

இத்தகைய வேண்டுகோளானது, தீகாமடுல்லவிலும் மட்டக்களப்பிலும தமது மக்களுககுத் தன்னாட்சி உரிமை வழங்கப்படவேண்டும் என கருணா கோரியதைத் தொடர்ந்து விடுக்கப்பட்டது. வடக்கும, கிழக்கும் ஒனறிணைந்திருப்பது சமாதானத் திட்டத்தின் படியேயாகும். அடுத்த ஒரு வருடத்திற்குள்ளேயே கருத்துக்கணிப்பு நடத்தியிருக்க வேண்டும்.

இக் கருத்துக்கணிப்பு தேர்தல் ஆணையாளரினால் மட்டுமே நடத்தப்படல் வேண்டும். அத்துடன் வடக்கு-கிழக்கு பிரிக்கப்படவேண்டுமா? இல்லையா? என்பதுபற்றிய கருத்துக் கணிப்புப் படிவமும் கிழக்கு மாகாண வாக்குச்சீட்டில் அச்சடிக்கப்படல் வேண்டும். இவ்வாறு அவர்களின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி-06)

# இரு பிரதான கட்சிகளிடையே மோதல் சம்பவங்கள் அதிகரிப்பு

(கொழும்பு)

ஐக்கியதேசியக் கட்சி ஆதரவாளர்களுக்கும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆதரவாளர்களுக்கும் இடையிலான கைகலப்பு, மற்றும் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

தேர்தல் பிரசாரம் ஆரம்பமான கடந்த முதலாம் திகதிமுதல் இவ் விரு கட்சிகளுக்கும் இடையே கைகலப்பு, வன்முறைகள், மோதல்கள் இடம்பெற்று வருகின்றன.

அடுத்தமாதம் 2ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் இவ்விரு கட்சிகளுக்கும் இடையே போட்டா போட்டி நிலவி வருகிறது. இதனால் இரு கடசி ஆதரவாளாகளும் தங்களுக்கிடையே மோதிக்கொள்கின்றனர்.

வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, ஹபிட்டிக் கொலாவ, மொனறாகல, வெல்லவாய, புத்தளம், காலி ஆகிய இடங்களில் இவ்வாறான வனமுறைச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

(தி-63)

# ஆராதனை விழா

(பொன்னாலை)

வடஇலங்கைச் சங்கீத சபையின் ஏற்பாடடில், சற்குரு ஸ்ரீ தியாகராசா சுவாமிகளின் 157ஆவது ஆராதனை விழா எதிர்வரும் 13ஆம திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இதேவேளை, மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தமிழிசை விழாவையும், இச்சபைகொண்டாடத் தீர்மானித்துள்ளது.

இவ்விரு விழாக்களும் கோப்பாய் கிறிஸ்தவககல்லூரியில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(தி-49)





அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் பெண்கள் அபிவிருத்தித்திட்டப் பரிவினர் நடத்திய சர்வதேச மகளிர்தினக் காட்சிகள்.

படங்கள்:ஐங்கரன்

# செய்தித் துளிகள்

## முன்பள்ளிக்குத் தளபாடம்

(மருதங்கேணி)

கடந்த ஆண்டில் பன்முகப் படுத்தப்பட்ட நிதியின் கீழ் பச்சிலைப பள்ளிப் பிரதேச சபையின் அனுசரணையுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிறுவனத்தால் பச்சிலைப் பள்ளிப் பிரதேசத்தைச் சேர்ந்த 7 முன் பள்ளிகளுக்குத் தலா 6 இருக்கைகள் மற்றும் ஆசிரியர் மேசையுடன் இணைந்த 2 கதிரைகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் பச்சிலைப்பள்ளி புனர்வாழ்வு நிறுவனத்தில் நடைபெற்றது. பச்சிலைப்பள்ளி பிரதேசசபைச் செயலாளர் க.சிவராசா, தொழில்நுட்ப அலுவலர் கிருஷ்ணதாசன், பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி நிறுவனத்தைச் சேர்ந்த செ.இளங்கோ மற்றும் முன்பள்ளி மேற்பார்வையாளர் செல்வி சி.யசோதரி உட்பட முன்பள்ளி ஆசிரியர்கள், நலன்விரும்பிகள் என்பவரும் கலந்துகொண்டனர். (தி-35)

## சமகால அரசியல் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சமகால அரசியல் நிலவரங்கள் மற்றும் தேர்தல் நிலைமைகள் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன், இன்று வியாழக்கிழமை பி.ப 3.00 மணிக்கு யாழ்.மாவட்ட மறைக் கல்வி நடுநிலையத்தில் "தேர்தல் -2004" எனும் கருப்பொருளில் முன்னாள யாழ் பல்கலைக்கழக துணைவேந்தரும் புவியியற்துறைப் பேராசிரியருமான பொன்.பாலசுந்தரம் பிள்ளையின் ஆய்வுக் கண்ணோட்டமும், கலந்துரையாடலும் நடைபெறவுள்ளன. (தி-18)

## சீட்டிழுப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, இம் மாதம் முதல் வாரத்தில் ஸ்ரான்லி வீதியிலுள்ள மக்கள் வங்கிக் கிளையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட வனிதா வாசனா மகளிர் கணக்குகளுக்கான சீட்டிழுப்பு நிகழ்வு கடந்த திங்கட்கிழமை கிளை முகாமையாளர் ரகு தலைமையில் இடம்பெற்றது.

மேற்படி வாரத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட இக் கணக்குகளின் உரிமையாளர்களில் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் முதல் ஐவருக்கு வைப்புச்செய்த பணத் தொகையின் இரு மடங்குத் தொகை அவர்கள் கணக்கில் வரவு வைக்கப்படும்.

இந் நிகழ்வில், விருந்தினராகத் தபால் திணைக்களத்தின் கணக்காளர் சுதர்சினி கலைச்செல்வன், நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கப் பொது முகாமையாளர் மறறும் மக்கள் வங்கி உதவிப் பொது முகாமையாளர் இளம்பிறைநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேற்படி குறிப்பிட்ட வாரத்தில் 320 பேர் வனிதா வாசனா மகளிர் சேமிப்புத்திட்டத்தில் இணைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(தி-3)

## உள்ளூர்த் தேங்காய் வியாபாரிகள் பாதிப்பு

(இணுவில்)

தென்பகுதி வியாபாரிகளின் வருகையால் மருதனார் மடச் சந்தையில் உள்ளூர்த் தேங்காய் வியாபாரிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

தென்பகுதி இருந்து லொறிகள் மூலம் தேங்காய்களை ஏற்றி வரும் தென்னிலங்கை வியாபாரிகள் மருதானார் மடச்சந்தைப் பகுதியில் வைத்து மலிவான விலையில் அவற்றை விற்பனை செய்து வருகின்றனர்.

இதனால் சந்தையினுள் வைத்து தேங்காய் வியாபாரம் செய்யும் உள்ளூர் வியாபாரிகள் தம் வசமுள்ள தேங்காய்களை விற்க முடியாது பாதிக்கப்பட்டுள்ளனர். (122)

## திரைப்படம் பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

"சலன சித்திரம்" அமைப்பினால் எதிர்வரும் 13,14ஆம் திகதிகளில் நெல்லியடி இராஜலஷ்மி திரையரங்கில் திரையிடப்படவிருந்த "SECRET LOVE" (இரகசிய சிநேகம்) என்ற இலண்டன் தமிழ்த் திரைப்படம், தணிக்கை விதிமுறையில் ஏற்பட்ட கால தாமதம் காரணமாக மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளதாக "சலன சித்திரத்தின்" யாழ். மாவட்டத் தொடர்பாளர் அறிவித்துள்ளார். (தி)

## நிர்வாக சபை உறுப்பினர்தெரிவு

(சுண்டுக்குளி)

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம கடந்த 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்.மத்திய கல்லூரி மண்டபத்தில், அதன் தலைவர் டீ.ஏ.எம்.குணசிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது, தலைவராக டீ.ஏ.எம்.குணசிங்கமும், உப தலைவர்களாக கே.நாகேந்திரம், எஸ்.முருகதாஸ் ஆகியோரும் செயலாளராக கே.மனோகரனும், உப செயலாளராக எஸ்.அப்புத்துரையும், பொருளாளராக கே.ஏகாம்பரமும், நிர்வாக சபை உறுப்பினர்களாக ஏ.குமாரசிவம், ஆர்.யசிதரன், எஸ்.கிளிபேட் அன்ரனிப்பிள்ளை, எஸ்.செல்வச்சந்திரன், கே.முகுந்தன் ஆகியோரும் தெரிவு செய்யப் பட்டுள்ளனர். (தி-110)

## திருட்டுச் சம்பவங்கள் திடீரென அதிகரிப்பு

(சுண்டுக்குளி)

சுண்டுக்குளிப் பகுதியில் குறிப்பாக ஈச்சமோட்டைப் பகுதியில் இரவு வேளைகளில் என்றுமில்லாதவாறு அண்மைக்காலமாக களவுகள் அதிகரித்துள்ளன.

கடந்த 8 ஆம் திகதி ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தில் பிற்பகல்"உலக சமாதான ஒத்துழைப்பு மனறத்தின்" கூட்டம் நடைபெற்றது.

இதற்காக வாடகைக்கு எடுத்த பிளாஸ்ரிக் கதிரைகள் கூட்டம் முடிந்த பின்னர் அருகில் உள்ள வீட்டு விறாந்தையில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவற்றுடன் வாடகைக்கு எடுத்த எவர்சில்வர் டம்ளர்கள் அடங்கிய பெட்டியும் வைக்கப்பட்டிருந்தது.

அன்றிரவு வைக்கப்பட்டிருந்த கதிரைகளில் 11 கதிரைகளும் டம்ளர்கள் வைக்கப்பட்டிருந்த பெட்டி ஆகியவற்றுடன் அந்த வீட்டு விறாந்தையில் விடப்பட்டிருந்த வீட்டு உரிமையாளரின் லுமாலா சைக்கிலும் களவு போய் உள்ளன.

இதே போன்று அண்மையில் ஈச்சமோட்டை வீதியில் அமைந்துள்ள யாழ் .உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்க பணிமனைக்கு வெளியே இருந்த 6 இரும்புக் கதிரைகளும் களவு போனமை குறிப்பிடத்தக்கது. (தி-110)

## விசாரணை மேல் நீதி மன்றுக்கு மாற்றம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கிழக்கு கோயில் வீதியைச் சேர்ந்த சின்னத்துரை கனகசௌவுந்தரி என்பவரை 2001 ஆம் ஆண்டு யூலை மாதம் அவரது வீட்டில் வைத்து கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட கோண்டாவில் கிழக்கு பொற்பதியைச் சேர்ந்த செல்வராசா யோகராசா என்பவர் மீதான சுருக்கமுறையற்ற விசாரணைகள் யாழ். மாவட்ட நீதவான் கே.ரி.விக்னராஜா முன்னிலையில் நிறைவு பெற்றதைத் தொடர்ந்து, இவ் வழக்கு விசாரணைக்காக யாழ்.மேல் நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வழக்கின் எதிரி மீதான குற்றச்சாட்டுப் பத்திரம் சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து மேல் நீதிமன்றுக்குக் கிடைக்கப் பெற்றதும் விசாரணைகள் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன. (உ-3)

## கைதிகள் இடமாற்றம்

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைச் சாலையில் அண்மையில் இடம்பெற்ற இரு குழுக்களுக்கிடையிலான மோதல் சம்பவத்துடன் தொடர்புடைய 30 கைதிகள் வேறு சிறைச்சாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, வெலிக்கடைச் சிறைச்சாலையில் அண்மையில் இடம்பெற்ற இரு குழுக்களுக்கிடையிலான மோதல் சம்பவம் குறித்து பூரண விசாரணை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் புறூம் மர்சூத் தெரிவித்துள்ளார். (தி-61,10)

## சந்தைவாய்ப்பின்மை

(இணுவில்)

புகையிலைக்கு தகுந்த சந்தை வாய்ப்புப் பெற்றுக்கொடுக்கப்படாமையினால் புகையிலை செய்கையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இம் முறை மேற்படி பகுதிகளில் அதிகளவு புகையிலை விளைச்சல் காணப்படுகின்றது. எனினும் இதனை விற்பனை செய்து இலாபம் ஈட்டக் கூடியளவு சந்தை வாய்ப்புக்கிடையாமையால் தாம் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாக அப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (தி-122)

## கூட்டம்

(பொன்னாலை)

யாழ்.மாவட்டக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் பொதுக் கூட்டம் எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை காலை யாழ்.வலயக் கல்விப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

குடாநாட்டின் கல்வி மேம்பாடு தொடர்பாக ஆராயப்படவுள்ள இக் கூட்டம் யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் யாழ்.கல்வி வலயங்களைச் சேர்ந்த சுமார் 100ற்கும் மேற்பட்ட கல்விசார் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (தி-49)

★★★

(யாழ்ப்பாணம்)

கட்சித்தலைவர்கள் செயலாளர்கள் அதிகாரம் அளிக்கப்பட்ட முகவர்கள், குழுத் தலைவர்கள் ஆகியோருக்கான சந்திப்பு ஒன்று எதிர்வரும் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ்.செயலகத்தில் இடம் பெறவுள்ளது. (தி-19)

★★★

(யாழ்ப்பாணம்)

உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கான கூட்டம் ஒன்று யாழ்.செயலகத்தில் எதிர்வரும் 17 ஆம் திகதி புதன்கிழமை காலை 10.00 மணிக்கு இடம்பெறவுள்ளது. (தி-19)

★★★

(யாழ்ப்பாணம்)

பொதுத் தேர்தல் காலத்தில் சிரேஷ்ட தலைமைதாங்கும் அலுவலர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 18,19 ஆம் திகதிகளில் காலை 10.00 மணிக்கும் 2.00 மணிக்கும் யாழ். செயலகத்தில் இடம்பெறவுள்ளது. (தி-19)

★★★

(யாழ்ப்பாணம்)

பிரதம செயலர்கள் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் உதவி அரசாங்க அதிபர்கள் ஆகியோருடன் தேர்தல் தொடர்பான கூட்டம் ஒன்று நாளை வெள்ளிக்கிழமை பி.ப 2.00மணிக்கு யாழ்.செயலகத்தில் இடம்பெறவுள்ளது. (தி-19)

## மஹோற்சவம்

(பொன்னாலை)

சங்கரத்தை பிட்டியம்பதி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் வருடாநத மஹோறசவம் எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது. (தி-49)

# தேர்தலை கண்காணிக்க 8 அமைப்புகளுக்கு அனுமதி

(கொழும்பு)

ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் தொடர்பான கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எட்டு அமைப்புக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இவற்றில் "பவ்ரல்" மற்றும் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் மத்திய நிலையம் என்பவற்றிக்கு மட்டுமே வாக்களிப்பு நிலைகளுக்கு நேரில் சென்று காண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க அனுமதி வழங்கியுள்ளார்.

இந்த இரண்டு அமைப்புகளைத் தவிர வேறு எந்தவொரு அமைப்புக்கும் இத்தகைய கண்காணிப்பு நடவடிக்கைக்கு அனுமதி வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# இடுப்புப் பட்டிகளை கழற்றுமாறு கடற்படையினர் எச்சரிக்கை

## குறிகட்டுவானில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

பெண் போராளிகளின் இடுப்புப் பட்டிகளைக் கழற்றுமாறு குறிகட்டுவான் பகுதி கடற்படையினர் அவர்களை எச்சரித்தனர்.இதனால் இருதரப்பினருக்கும் இடையே முறுகள் நிலை ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை குறிகட்டுவான் இறங்குதுறைப் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

வேலணைப்பகுதியிலிருந்து அரசியல் நடவடிக்கைகளுக்காக நெடுநதீவு நோக்கிச் சென்று கொண்டிருந்த 3 பெண்போராளிகளை குறிகட்டுவான் இறங்குதுறைப் பகுதியில் வைத்து வழிமறித்த கடற்படையினர் அவர்கள் அணிந்திருந்த இடுப்புப் பட்டியைக் கழற்றுமாறும் அவ்வாறு கழற்றாவிடில் தொடர்ந்து செல்ல அனுமதிக்க முடியாது எனவும் அறிவுறுத்தியுள்ளனர்.

எனினும் இதற்கு மறுப்புத் தெரிவித்த பெண் போராளிகள் தாம் அணிந்திருப்பது இராணுவ இடுப்புப்பட்டியல்ல இது. சாதாரண ஆடைகளுடன் சம்பந்தப்பட்ட சாதாரணபட்டி எனத் தெரிவுபடுத்தியுள்ளனர்.

இதனால் இருதரப்பினருக்குமிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தைத் தொடர்ந்து அங்கு முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது. எனினும் போராளிகள் தமது கருத்தில் விடாப்பிடியாக நின்றதால் படையினர் அவர்களை மேற்கொண்டு செல்ல அனுமதித்தனர். (தி-18,4)

# தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கு உள்ளக ரீதியில் இடமாற்றங்கள்

(திருகோணமலை)

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் அரச அலுவலகங்களில் கடமையாற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு உள்ளக இடமாற்றங்களை வழங்குவதற்கு வடக்கு - கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் தொடர்ச்சியான வேண்டுகோளுக்கு அமைவாகவே, வலயக் கல்வி அலுவலங்களுக்கு இடையில் உள்ளக இடமாற்றங்களைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாகாணக் கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர் ஜே.ஜே.முரளிதரன் தெரிவித்தள்ளார்.

வலயககல்வி அலுவலர்களுக்கு இடையில் இடமாற்றம் பெறவிருக்கும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், தமது விண்ணப்பப்படிவங்களை வலையக்கல்வி பணிப்பாளரின் சிபார்சுடன் மாகாணக் கல்வ அமைச்சுக்கு அனுப்பிவைக்குமாறு கல்வி அமைச்சின உதவிச் செயலாளர் கேட்டுள்ளார். (தி-2)

# தனியார் ஊடகங்களுக்கு ஒழுக்க நெறிக் கோவை

(கொழும்பு)

அரசியல் ரீதியில் ஒரு தலைப் பட்சமான செய்திகளையும் நிகழ்ச்சிகளையும் வெளியிடுவதைத் தடுப்பதற்கென தனியார் ஊடக நிறுவனங்களுக்கு ஒழுக்கநெறிக் கோவையொன்றை வழங்கியுள்ளதாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

கடந்த சில வாரங்களாக அரசியல் ரதியில் ஒருதலைப் பட்சமான வகையில் சில தனியார் ஊடகங்கள் நடந்து வந்துள்ளன. இத்தகைய போக்குகளை மறந்து தேர்தல் காலத்தில் தனியார் ஊடகங்கள் நடுநிலையாக நடந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுள்ளார்.

இதேவேளை, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான வன்னிப்பகுதியில் தேர்தலை நடத்துவதா? இல்லையா? என் பது பற்றிய முடிவு இந்தவாரத்தில் வெளியிடப்படும் எனவும் தேர்தல் ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (தி-60,10)

# வன்முறைகளைக் கண்காணிக்க விசேட பொலிஸார் பணியில்

(யாழ்ப்பாணம்)

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கென சிவில் உடையில் விசேட பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படுவர் என பொலிஸ்மா அதிபர் இந்திராடி சில்வா தெரிவித்துள்ளார்.

இது வரைகாலமும் நடைமுறைப்படுத்தப்படாத இந்நடவடிக்கையை நடைமுறைப்படுத்துவதன் மூலம் தேர்தல் வன்முறைச் சம்பவங்களை இலகுவாகக் கட்டுப்படுத்தமுடியும். அத்துடன் வன்முறைகளில் ஈடுபடுவோரை இனங்கண்டு இலகுவில் கைது செய்ய முடியும்.

தேர்தல் வன்முறைகளைக் கட்டுப்படுத்துவதற்காக விசுவாசத்துடன் பல பொலிஸார் கடமையில் ஈடுபட்டுவருகின்றனர். எனினும இவ்வாறான பொலிஸாருக்கு பல்வேறு விதமான அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுவருகின்றன.

இவ்வாறு சிவில் உடையில் கடமையாற்றும் பொலிஸாருக்கு விசேட அதிகாரங்களும் வழங்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமான முக்கிய சந்திப்பொன்று எதிர்வரும் 15 ஆம் திகதி பொலிஸ் தலைமையகத்தில் இடம்பெறவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (தி-4,61)

# இந்திய-பாகிஸ்தான் போட்டி ரசிகர்களிடையே மோதல்

இந்திய கிரிக்கெற் அணி நேற்று பாகிஸ்தானுக்கான கிரிக்கெற் விஜயத்தினை மேற்கொண்டனர். இப் பயணத்திற்கு முன்னதாக 3நாட்களாக கல்கத்தா விளையாட்டரங்கில் இந்திய கிரிக்கெற் அணியினர் தொடர்ச்சியாக பயிற்சிகளில் ஈடுபட்டு வந்தனர். இப் பயிற்சிகளின் போது இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர்களுக்கென இந்திய கிரிக்கெற் அணியின் முன்னாள் தலைவரான கபில்தேவ் விசேட பயிற்சிகளை வழங்கியிருந்தார்.

இதேவேளை, இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் இம் மாதம ஆரம்பமாகவுள்ள சர்வதேச ஒருநாள் கிரிகெற் போட்டித்தொடரின் போது அரசியல்வாதிகள், சினிமா நட்சத்திரங்கள் மற்றும் முன்னாள் தேசிய கிரிக்கெற் வீரர்கள் ஆகியோர் பார்வையாளர்களாகக் கலந்துகொள்வார்கள் என பாகிஸ்தான கிரிகெற் கட்டுப்பாட்டுச் சபையினர் தெரிவித்துள்ளனர்.

மேலும், முன்னாள் இந்தியப் பிரதமரான காலஞ்சென்ற ராஜீவ் காந்தியின் புதல்வர்கள் இருவர் எதிர்வரும் சனிக்கிழமை கராச்சியில் நடைபெறவுள்ள முதலாவது சர்வதேச ஒருநாள் போட்டியினை நேரில கண்டுகளிக்கவுள்ளனர் என்றும் பாகிஸ்தான் கிரிக்கெற் கட்டுப்பாட்டுச்சபையின் பேச்சாளர் ஸமியுள்ஹஸன தெரிவித்திருக்கின்றார்.

இதேவேளை, இப் போட்டித் தொடரின ஏனைய போட்டிகளைக் கண்டுகளிப்பதற்காக இந்தியத் திரையுலகைச் சேர்ந்த பலர் பாகிஸ்தான் வருகைதரவிருப்பதாக அந்நாட்டின் கிரிக்கெற் கட்டுப்பாட்டுச் சபையின் சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரியான ரமீஸ் ராஜா தெரிவித்திருக்கின்றார்.

இந்நிலையில் வரலாற்றுச் சிறப்புமிக்க இப் போட்டித்தொடரைக் கண்டுகளிபபதற்காக நுழைவுச் சீட்டுக்களைப் பெறுவதில் ரசிகர்கள் பெருமளவில் குவிவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (தி-68)

# ஆஸி. அணியுடனான போட்டியில் இலங்கை அணி 352 ஓட்டங்கள்

இலங்கை-அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் காலி சர்வதேச மைதானத்தில் நடைபெறும் முதலாவது டெஸ்ட்போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவின்போது இலங்கை அணி 115 ஓவர்களை எதிர்கொண்டு 6விக்கெற்றுக்களை இழந்து 352ஒட்டங்களைப் பெற்றுள்ளது. ஒரு விக்கெற்றை இழந்து 81ஓட்டங்கள் என்ற நிலையில், இரண்டாம் நாள் ஆத் தொடங்கிய இலங்கை அணி, மதியபோசன இடைவேளைக்குமுன மேலும் 2 விக்கெற்றினை இழந்தது. மாவன் அத்தப்பத்து 47ஒட்டங்களுடனும், குமார் சங்ககார 22ஓட்டங்களுடனும், நேற்று முன்தினம் ஆட்டநேர முடிவின் போது சனத் ஜயசூரியா 35ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார்.

இரண்டாம் நாள் ஆட்டத்தில் சிறப்பாக துடுப்பெடுத்தாடிய டி. எம்.டில்சாண் 188பந்துகளை எதிர்கொண்டு 12 நான்குகள, ஒரு சிகஸர் உட்பட 104ஓட்டங்கள் பெற்றதுடன் திலகரதன மற்றும் டில்ஷான ஆகியோர் இணைப்பாட்டமாக 100 ஓட்டஙகளைப் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

**இரண்டாம் நாள் ஆட்டத்தின் ஸ்கோர் விபரம் வருமாறு,**

மாவன் அத்தபபது **-b** கிலெஸ்பி 47, குமார் சங்ககார-**b&c** கஸ் போலிச் 22, மஹேல ஜெயவர்த்தன **-b** சைமன்ஸ், **c** மத்தியூ ஹெய்டன 68, டி.எம்.டில்ஷான் 104, ஹசான திலகரத்ன-**LBW** ஷேன்வோர்ன் 33, திலான் சமரவீர- ஆட்டமிழக்காமல்-21, உப்பிள் சந்தன ஆட்டமிழககாமல்-20, உதிரிகள்2 தெமாத்தம்-352/6 ஓவர்கள் 115.

பந்துவீச்சைப் பொறுத்தவரை அவுஸ்திரேலிய அணி சார்பில் ஜேஸன் கிளெஸ்பி ஒரு விக்கெற்றினையும், மைக்கல் கஸ்போலிச் 2விக்கெற்றினையும் ஷேன்வோர்ன் 6 விக்கெற்றினையும், அன்ரூ சைமன்ஸ் 1 விக்கெற்றினையும் வீழ்த்தினர்.

இந்தப் போட்டியின் மூலம் டெஸ்ட் போட்டியில அறிமுகமான அன்ரூ சைமன்ஸ் 1விக்கெற்றினை வீழ்த்தியதுடன் முதல் இன்னிங்சில் ஓட்டம் எதுவும் பெறாமல் ஆட்டமிழந்தமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன், டில்ஷான் முதல் இன்னிங்சிற்காக இலங்கை சார்பாகப பெற்ற 104ஓட்டங்கள் மூலம் தனது 3வது டெஸ்ட் சதத்தைப் பெற்றுள்ளமகுறிப்பிடத்தக்கது.(தி-121)

# சர்வதேச போட்டியில் விளையாட அமெரிக்க அணிக்குத் தகுதி

சர்வதேசக் கிரிக்கெற் போட்டிகளில் விளையாட அமெரிக்கா தகுதியினைப் பெற்றுள்ளது. டுபாயில் நடைபெற்ற 6 நாடுகள் கிரிக்கெற் சவால் தொடரில் ஸ்கொட்லாந்து அணியை 5விக்கெற்றுக்களால் தேற்கடித்ததன் மூலம் இந்தத் தகுதியினைப் பெற்றுள்ளது.

இதன்மூலம் எதிர்வரும் செப்ரம்பர் மாதம் இங்கிலாந்தில் நடைபெறவுள்ள ஐ.ஸீ.ஸீ.வெற்றிக்கிண்ணத்தொடரில் பங்கேற்கும் வாய்ப்பினை அமெரிக்கா பெற்றுள்ளது. இதன் பிரகாரம் தனது கன்னி ஒருநாள் தொடரில் உலகச் சம்பியனான அவுஸ்திரேலிய அணியை எதிர்த்தாடவுள்ளது.

அத்துடன், 2007ஆம் ஆண்டில் மேற்கிந்தியாவில் நடைபெறவுள்ள உலகக் கிண்ணப் போட்டித் தொடரில் கலந்துகொள்ளும் வாய்ப்பினையும் அமெரிக்க அணி பெரும்பாலும் பெற்று விடுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இதுதொடர்பாக கருத்துத் தெரிவித்த அமெரிக்க கிரிக்கெற் அணித தலைவர் ரிச்சர்ட் ஸ்டெபல், கிரிக்கெற் விளையாட்டில் நாம் கீழ் நிலையில் இருக்கலாம். எனினும் எமது வீராகளின் சிறப்புத் திறமை காரணமாக வெற்றியீட்ட முடிந்ததென்றும் இந்த வெற்றிமூலம் வட அமெரிக்கப் பிராந்தியத்தில் கிரிக்கெற ஆட்டம் பிரபல்யமடைந்து வரும் என்றும் அடுத்த உலகக் கிண்ணத் தொடரின் போது அமெரிக்காவிலும போட்டிகளை நடாத்தும் வாய்ப்பும இதன் மூலம் கிடைக்கு மென்றும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ஐ.ஸீஸியில் உறுப்பினர் அந்தஸ்தினைப் பெற்றுள்ள அமெரிக்கா, உலகக் கிண்ணத தொடரின் ஒரு சில போட்டிகளை தமது நாட்டில் நடாத்துவதற்காக விண்ணப் பிக்குமென எதிர்பார்க்கப் படுகின்றது. புளோடொ மாநிலத் தில்லடர் ஹில நகரில் 40 ஆயிரம் ரசிகர்களை உள்ளடக்கும் நவீன வசதிகளுடனான கிரிக்கெற் அரங்கொன்று ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை,கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுததாடிய ஸ்கொட்லாந்து அணி 48ஓவர்களில்226 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அமெரிக்கா 5 விக்கெற் இழப்பிற்கு 208ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியமை குறிப்பிடத்தக்கது. (தி-121)

# நியு,சிலாந்துடனான போட்டியில் தென்னாபிரிக்கா வலுவான நிலையில்

நியூசிலாந்தின் கமில்டன் வெஸ்பார்க் மைதானத்தில் நேற்று ஆரம்பமான தென்னாபிரிக்க-நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெற் போட்டியில் முதலாம்நாள் ஆட்டநேர முடிவின் போது தென்னாபிரிக்க அணி வலுவான நிலையில் இருந்தது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணித் தலைவர் ஸ்மித் தனது அணியை முதலில் துடுப்பெடுத்தாட அழைத்தார். அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி முதல்நாள் ஆட்டநேர முடிவின் போது 4 விக்கெற்றினை இழந்து 279 ஓட்டங்களைப் பெற்றது.

தென்னாபிரிக்க அணி தனது முதல் விக்கெற் இணைப்பாட்டமாக 51ஓட்டங்களைப் பெற்றது. இந்த இணைப்பாட்டத்தை முறிக்கும் முகமாக கிரஹாம் ஸ்மித் 25 ஓட்டங்களுடனும ஹேஸல கிப்ஸ் 40ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

அதனைத் தொடர்ந்து மூன்றாவது விக்கெற்றுக்காக ஜோடி சேர்நத ஜக்கலிஸ் நுபோலவுடன் இணைந்து அணிக்காக 132ஓட்டஙகளை இணைபபாட்டமாகப் பெற்று தென்னாபிரிக்க அணியை ஒரு வலுவான நிலைக்கு இட்டுச்சென்றனர்.

ஜக்கலிஸ் 92ஓட்டங்களுடனும் நுபோல் 72ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

ஆட்டநேர முடிவின்போது கரி ஹெய்டன் ஆட்டமிழக்காமல் 31 ஓட்டங்களையும் போல் அடம்ஸ் ஆட்டமிழக்காமல் 07 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர்.

பந்துவீச்சில் நியூசிலாநது அணி சார்பாக டானியல் லிக்டோரி 2 விக்கெற்றுக்களையும், ஸ்கொட் சைரிஸ், ஜேக்கப் ஓரம் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெற்றுக்களையும் வீழ்த்தினர். (தி-121)

## மெய்வன்மைப் போட்டி

(வடலியடைப்பு)

யா/காட்டுப்புலம் அ.த.க.பாடசாலையின் வருடாந்த இல்ல மெயவல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பி.ப.2.15மணிக்கு பாடசாலை அதிபர் நா.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சங்கானை மக்கள் வங்கி முகாமையாளர் திரு. திருமதி அச்சுதம்பிள்ளை பிரதம விருந்தினர்களாகவும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சிவமகாராசா ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (தி-121)

# விளையாட்டுச் செய்திகள்

# தோல்விச் சரித்திரத்தை மாற்றி எழுதுவோம் இந்திய அணித்தலைவர் கங்குலி கங்கணம்

பாகிஸ்தானிற்கு எதிராக அந் நாட்டில் நடந்த டெஸ்ட் போட்டி எதிலும் இந்திய அணி வென்றதில்லை என்கின்ற சரித்திரத்தை



இந்தப் பயணத்தில் மாற்றி எழுதுவோம் என்று இந்திய அணித் தலைவர் சௌரவ் கங்குலி கூறியுள்ளார்.

கொல்கத்தாவில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய கங்குலி பாகிஸ்தானிற்கு எதிரான ஒருநாள் டெஸ்ட் போட்டிததொடர்களில் இந்திய அணிக்கு ஏறபட்டுள்ள அழுத்தம் குறித்து இவ்வாறு பதிலளித்தார்.

சர்வதேச கிரிக்கெற் என்பது அது அவுஸ்திரேலியாவிற்கு எதிரான போட்டியாக இருந்தாலும், பாகிஸ்தானிற்கு எதிரான போட்டியாக இருந்தாலும் சரி உளவியல் ரீதியாக அழுத்தம் தரக்கூடியவை எனறு ஒப்புக்கொண்ட கங்குலி, முதல முறையாக பாகிஸ்தான் செலலக் கூடிய இந்திய அணி வெற்றி பெறக் கூடிய வாய்ப்புள்ள அணி என்கின்ற மதிப்புடன் செல்கிறது.

இப்படி ஓர் மதிப்பை இந்திய அணி பெற்றிருப்பது அயல் நாடுகளில் இந்திய அணி சிறப்பாக விளையாடியதே காரணம் என்று கூறிய கங்குலி, இது ஒரு சவாலான பயணம என்பதைவிட நல்லெண்ண பயணம் என்று கூறுவதே சரியாக இருக்கும்.

ஒவ்வொரு நாட்டிற்கும் நமது நாட்டின் தூதர்களாகவே செல்கின்றோம். அப்படித்தான் பாகிஸ்தானிற்கும் செல்கிறோம். ஆனால் மக்கள் அதை வித்தியாசமாகவும், வேற்றுமைப்படுத்தியும் பார்க்கின்றனர். ஆனால், இந்தப் பயணத்தில் ஒவ்வொரு நாளும் நாங்கள் மிகச சிறப்பாக ஆடுவோம்.

வேகப்பந்து வீச்சைப் பொறுத்தவரை "அது பாகிஸ்தானின் பலம் என்பதை ஒப்புக்கொள்கின்றோம். அதே நேரததில் சரியாக, துல்லியமாக பந்துவீசி விககெற்றை வீழ்த்தும் ஆற்றல் எஙகளுடைய பலம்" என்று கூறினார். தொடர்ந்து கூறுகையில்,

"உலகின் தலைசிறந்த நமது இரண்டு சுழற்பநது வீச்சாளர்களும் காயப்பட்டு ஆடமுடியாத காரணத்தினால் பாகிஸ்தானின் வேகப்பந்து வீச்சு குறித்து அனைவரும் பேசுகின்றனர். அதனால்தான் ஷொய்ப் அக்தார், முகமட் சமி, ஜஹீர்கான் பாலாஜி, பத்தான் ஆகியோரின் பெயர்கள் பெரிதும் விவாதிக்கப்படுகின்றது. ஷொய்ப் அக்தாரைப் பொறுத்தவரை அவர் மிகச் சிறந்த பநதுவீச்சாளரே. ஆனால் இம்முறை வஸீம் அக்ரம், வக்கார் யூனிஸ் ஆகியோருடன் இணைந்தே அவர் பந்துவீசியுள்ளார். ஆனால் இம்முறை ஷொய்ப் அக்தார், பாகிஸ்தானின் பந்து வீச்சிற்கு தலைமையேற்றுள்ளார். பாகிஸ்தானின் மற்றப் பந்து வீச்சாளர்கள் அவருடைய ஆலோசனையை எதிர்பாாக்கின்றனர். எனவே இந்தப் போட்டித்தொடரில் அவருக்குத்தான் அழுத்தம் அதிகம்" என்று கங்குலி கூறினார்.

பாகிஸ்தானிற்கு எதிராக நான சிறப்பாக விளையாடியுள்ளேன். இம்முறையும் எனது சிறந்த மட்டைப் பணி தொடருவது மட்டுமன்றி, வெற்றி பெறக்கூடிய ஒரு அணியை தேர்வு செய்து களமிறங்குவேன். எனது பந்துவீச்சையும், பாகிஸ்தானிற்கு எதிராகப் பயன்படுத்துவேன். அந்த அணிக்கு எதிராக பலமுறை சிறப்பாக பந்துவீச்சியுள்ளேன். பாகிஸ்தான் பயணத்திறகு முன்னர் பிரதமர் வாஜ்பாயை சந்தித்தது அணியினரின் நம்பிக்கையை மேலும் மேம்படுத்தியுள்ளது என்று கூறினார். (தி-121)

## மெய்வன்மைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் 13ஆம் திகதி சனிக்கிழமை பி.ப.2.30மணிக்கு பாடசாலை அதிபர் க.ஜெயாநந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சஙகத்தின் சிரேஷ்ட பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம் பிரதம விருந்தினராகவும், யாழ்.கல்வி வலய ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் க.பிரகதீஸ்வரசர்மா சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (தி)




**கிரிக்கெற் ரசிகர்கள் அனைவரும் எதிர்பார்த்துள்ள இந்திய-பாகிஸ்தான் இடையேயான ஒருநாள் போட்டி எதிர்வரும் 13ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. பாகிஸ்தான் செல்லவுள்ள இந்திய கிரிக்கெற் அணியினர் கொல்கத்தாவில் பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர். பயிற்சியின்போது அணித் தலைவர் சௌரவ் கங்குலி.**

# தேசவழமை

வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
**சி.பத்மநாதன்**
பேராதனைப் பல்கலைக்கழகம்.

## 69 3.திருகோணமலைப் பிராந்திய வழமைகள் பற்றிய அறிக்கைகள்

### தேசவழமை பற்றித் திருகோணமலையிலுள்ள முதலியார்கள் எழுதிய குறிப்பு

1). ஒப்பம் மாப்பாண முதலியார், 2) ஒப்பம் கதிரவேலு முதலியார், 3) ஒப்பம் இரத்தினசிங்க முதலியார், 4) ஒப்பம் அமுதன் முதலியார், 5) ஒப்பம் அழகக்கோன் முதலியா, 6) ஒப்பம் அரசக்கோன் முதலியார், 7)ஒப்பம் எதிர்வீர பண்டித முதலியார், 8) ஒப்பம் வண சிங்க முதலியார், 9) ஒப்பம் தமோதர முதலியார்,10) ஒப்பம் இராசகாரிய முதலியார், 11) அத்தோனி முதலியார் ,12) ஒப்பபம் இராசேந்திர முதலியார்.

### கொட்டியாரம்பற்றிலுள்ள வழமைகள்
### (கொட்டியாரம் பற்று தலைமைக்காரர் எழுதிய அறிக்கை)

#### கல்யாணம்

கலியாணம் செய்ய விரும்புவோர் அதனைப்பற்றி முதலில் வன்னியருக்கு அறிவிக்க வேண்டும். இந்துக்களாயின் மணமகளும் மணமகனும் தாம் மணம் முடிக்கப்போவதாக உறுதியளிக்கும் வகையில் ஓர் உடன்படிக்கை எழுதிக் கொள்ளவேண்டும். அவர்களில் எவரேனும் ஒருவர் தனது வாக்கினிலே தவறுமிடத்துக் குற்றமோ தண்டனையோ உத்தரித்துக் கொள்வதாக உறுதி யளிக்கவேண்டும். அதன் பின் சமயாசாரங்களுக்கேற்பப் பிராமணரைக் கொண்டு கல்யாணச் சடங்கினையும் அதற்கு வேண்டிய கருமங்களையும் செய்தல் வேண்டும். அவற்றைத் தொடர்ந்து சில நாட்களுக்கு இனபந்துக்களுடன் விருந்துபசாரங்கள் நடைபெறும்.

இஸ்லாமியரைப் பொறுத்தவரையில் இஸ்லாமியச் சட்டங்களுக்கு ஏற்ப அவர்களின் திருமண வைபவங்கள் நடைபெறும். உரோமன் கத்தோலிக்கராயுள்ளவர்கள் மணம் முடிக்க விரும்புமிடத்து அவர்கள் அதனைப் பற்றி வன்னியருக்கு அறிவிக்கவேண்டும். அவர்களின் சடங்குகள் திருச்சபையின் விதிகளுக்கேற்ப நடைபெறும்.

#### சீதனம்

தகப்பன், தாய் ஆனவர்கள் சீதனமாகத் தாங்கள் பெற்ற பொருளையும் தேடிய தேட்டத்தையும் தம் பிள்ளைகளுக்குச் சீதனமாகக் கொடுக்கவேண்டும்.

#### சொத்துரிமை

ஒருவரின் முதுசொமும் பிற வழிகளாற்கிடைத்த சொத்துடைமைகளும் மருமக்களுக்குச் சேரும். ஒருவரின் சீதனமும் தேடிய தேட்டமும் அவரின் மக்களுக்குச் சேரும்.

#### நன்கொடைகள்

எவரேனும் ஒருவர் தன் முதுசொம், சீதனம், தேடியதேட்டம் ஆகியவற்றை நன்கொடை யாகக்கொடுக்க விரும்புவாரேல் அதற்கு அவர் தனது பிள்ளைகள், மருமக்கள், அவர்களல்லாத பிற உரிமையாளர் ஆகியோரின் சம்மத்தை எழுத்து மூலம் பெற்றுக்கொள்ளவேண்டும்.

#### ஒற்றியும் விற்பனையும்

எவரேனும் ஒருவர் தனக்கு முதுசொம்மாகவோ சீதனமாகவோ அல்லது தேடிய தேட்ட மாகவோ கிடைத்த ஆதனத்தை விற்குமிடத்தும் ஒற்றி வைக்குமிடத்தும் அதனைப் பற்றித் தனது மனைவி, மக்கள், மருமக்கள் அவர்கள் இல்லாத பிற உரிமையாளர் ஆகியோருக்கு அறிவித்து அவர்களின் சம்மதத்தை எழுத்து மூலம் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

#### குத்தகை

எவரேனும் ஒருவர் வயல் நிலங்களைக் குத்தகைக்குச் செய்கை பண்ணுமித்து ஓரமணம் நிலத்துக்கு ஆண்டொன்றுக்கு ஓரமணம் நெல் வீதமாகக் குத்தகை கொடுப்பது வழமையாகும்.

#### நெல், காசு ஆகியவற்றின் கடன்

ஏவருக்கேனும் காசு கடனாகக் கொடுக்கப்படும் இடத்து மாதம் ஒன்றுக்கு நூற்றுக்கு ஒருவீதம் என்ற வகையில் முதலுக்கு வட்டி கொடுக்கவேண்டும். நெல் கடனாகக் கொடுக்கப்படும் இடத்து அதற்கு வட்டி 25 அல்லது 50 வீதமாகும்.

#### மஞ்சள் நீரப்பிள்ளை

எவரேனும் மஞ்சள் நீரப்பிள்ளைகளை வளர்க்க விரும்பினால் , அப்பிள்ளைகளுக்குத் தம்மை வளர்க்கும் தாய் தந்தையரின் சொத்துடைமைகளில் உரிமை உள்ளவிடத்து அப்பிள்ளைகளை வளர்க்க விரும்புவோர் தமது உறவினரதும் உரிமையாளரினதும் சம்மதத்தைப் பெற்றுக் கொண்டே அவர்களை வளர்க்கலாம்.

### தம்பலகாமப்பற்றிலுள்ள வழமைகள்
### (தம்பலகாமத்துத் தலைமைக்காரர் எழுதிய அறிக்கை)

#### கல்யாணம் பற்றிய வழமைகள

கல்யாணஞ் செய்ய விரும்புவோர் அதனைப்பற்றி (நாட்டு) வன்னியருக்கு அல்லது தங்களிடத்து முதலியார்களுக்கு அறிவித்தல் வேண்டும். அவ்வாறு அவர்களிடம் போகும் போது வெற்றிலை கொண்டு போதல் முறையாகும். அவர்கள் முன்னிலையில் மணமகனும் மணமகளும் கலியாண ஒப்பந்தம் எழுதிக்கொள்ளல் வேண்டும். மணமகன், மணமகள் ஆகியோரில் எவரேனும் ஒருவர் தனது வாக்குறுதியிலே தவறினாற் குற்றப்பணம் கொடுப்பதாகவும் தண்டனைகளை உத்தரிப் பதாகவும் கலியாண ஒப்பந்தத்தில் உத்தரவாதஞ் செய்தல் வேண்டும். அதற்குப் பின்பு இன பந்துக்களிடம் வெற்றிலையுடன் சென்று அவர்களைக் கலியாணச் சடங்கிற்கு அழைக்கவேண்டும். பிராமணரை அழைத்து வந்து சுற்றத்தவர் முன்னிலையிற் கலியாணச் சடங்கினைச் செய்து மணமகளின் கழுத்திலே மணமகன் தாலியினைக் கட்டுதல் வேண்டும். அதன் பின் மணமகளின் பெற்றோர் சீதன உறுதியினை ஓலையில் எழுதிக்கொடுத்தல் வேண்டும்.

#### சீதனம்

தாய், தகப்பன் ஆனவர்கள் தாம் சீதனமாகவும் தேடிய தேட்டமாகவும் பெற்றுள்ள தங்க நகை, வெள்ளிநகை, வயல், குளம், தோட்டம், அடிமைகள் முதலான சொத்துடைமைகளைத் தங்கள் பிள்ளைகளுக்குச் சீதனமாகக் கொடுப்பர்.

#### சொத்துரிமை

தாய், தகப்பன் ஆனவர்கள் சீதனமாகவும் தேடிய தேட்டமாகவும் பெற்றுள்ள உடைமைகள் பிள்ளைகளுக்குச் சேரும். முதுசொமாகக் கிடைத்த பொருட்கள் மருமக்களுக்குச்சேரும். மருமக்கள் இல்லாதவிடத்து அவை பிள்ளைகளுக்குச் சேரும். பிள்ளைகள் இல்லாதவிடத்து அவை மிக நெருங்கிய உறவினருக்குச் சேரும். அப்படியானவர்களும் இல்லாவிடில் அச் சொத்துக்கள் திருச்சபைக்குக் கொடுக்கப்படும்.

(தொடரும்)



பிரபல நாதஸ்வரக் கலைஞர் நல்லூர் இராஜுவுக்கு அண்மையில் கொழும்பில் கலாபூஷணம் விருது வழங்கிக் கௌரவிக்கப் பட்டபோது எடுக்கப்பட்ட படம். அருகில் இந்து கலாசார அமைச்சின் பணிப்பாளர் திருமதி சாந்தி திருநாவுக்கரசு நிற்பதனையும் படத்தில் காணலாம்.



வண்ணை நாவலர் மகாவித்தியாலய விளையாட்டுப்போட்டி நிகழ்வில், முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட திரு. திருமதி எஸ். எஸ். தங்கராஜா ஆகியோர் பாண்ட் வாத்தியம் சகிதம் பாடசாலைச் சமூகத்தினரால் வரவேற்று அழைத்துச் செல்லப்படும் காட்சி.



யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினரால் நடாத்தப்பட்ட புண்ணிய நாச்சியம்மையார் தின நிகழ்வில் விருந்தினராகக் கலந்துகொண்ட வி. இராமநாதனுக்கு சைவ பரிபாலன சபைத் தலைவர் சைவப்புலவர் வ.கந்தசாமி பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதனைப் படத்தில் காணலாம். (படம்:எஸ்.சாந்தன்)

## தேர்தல் தொடர்பான அறிவுறுத்தல் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் பாராளுமன்றப் பொதுத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பை அத்தாட்சிப் படுத்தும் அலுவலர்களுக்கான கூட் டம் இன்று காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

தேர்தல் கடமைகளுடன் நேரடி யாகச் சம்பந்தப்பட்ட திணைக் கள, கூட்டுத்தாபன உத்தியோ கத்தர்களுக்கான கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கும், பிரதேச செயலர்கள், உதவி அரசாங்க அதிபர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்களுக் கான கூட்டம் பிற்பகல் 2.00 மணிக் கம் நடைபெறவுள்ளது.

கட்சிச் செயலாளர்கள், அங்கீ கரிக்கப்பட்ட முகவர்கள், சுயேட் சைக் குழுத் தலைவர்கள் ஆகி யோருக்கான கூட்டம் எதிர்வரும் 16 ஆம் திகதி காலை 10.00 மணிக்கும், உதவித் தெரிவத் தாட்சி அலுவலர்களுக்கான கூட் டம் எதிர்வரும் 17 ஆம் திகதி காலை 10.00 மணிக்கும் நடை பெறவுள்ளது.

சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கான கூட்டம் எதிர்வரும் 18, 19 ஆம் திகதிகளில் காலை 10.00 மணிக்கும், மாலை 2.00 மணிக்கும் நடைபெற வுள்ளது.

இக்கூட்டங்கள் யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற வுள்ளன.

வாக்களிப்பு எழுதுநர்களுக் கான கூட்டம் மார்ச் மாதம் 21 ஆம் திகதி யாழ்.இந்துக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, வட இந்து மகளிர் கல்லூரி, கிளி நொச்சி மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் காலை 9.30 மணிக்கும், மாலை 2.00 மணிக்கும் நடைபெறவுள்ளது.

இதேவேளை, இக்கூட்டம் இராம நாதன் கல்லூரி, சுழிபுரம் விக்ரோறி யாக் கல்லூரி, வேலணை சரஸ் வதி வித்தியாலயம் மற்றும் நெல் லியடி மத்திய மகாவித்தியாலயம் ஆகியவற்றில் மார்ச் 21 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இக்கூட்டங்கள் தொடர்பான கடிதம் ஒவ்வொருவருக்கும் தனிப் பட்ட ரீதியில அனுப்பிவைக்கப் பட்டுள்ளதாக யாழ். செயலக உத வித் தேர்தல் ஆணையாளர் தெரி வித்துள்ளார். (ச-3,19)

## பட்டமளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகப் பொதுப் பட்டமளிப்பு விழா எதிர்வரும் 27 ஆம் திகதி திட்டமிட்டவாறு நடை பெறுமென யாழ். பல்கலைக் கழகப் பதிவாளர் அறிவித்துள் ளார். (தி-18)

## அரசின் கொள்கைகளை எதிர்த்து

# 1000 பிரான்ஸ் விஞ்ஞானிகள் இராஜினாமா செய்ய முடிவு

(பிரான்ஸ்)

பிரான்ஸ் அரசாங்கத்தின் விஞ்ஞானம் தொடர்பான கொள்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக சுமார் 1000 முன்னணி விஞ்ஞானிகள் தமது நிர்வாகப் பதவிகளை இராஜினாமா செய்யப் போவதாக அறிவித்துள்ளனர்.

அடிப்படை ஆராய்ச்சியாளர்களுக்கான நிதியைப் பெருமளவில் வெவ்வேறு செயல்திட்டங்களுக்குப் பயன்படுத்தும் அரசாங்கத்தின் செயற்பாடுகளைக் கண்டித்தே தமது நிர்வாகப் பதவிகளை இராஜினாமாச் செய்யப்போவதாக பிரான்ஸ் நாட்டின் முன்னணி விஞ்ஞானிகள் சுமார் 1000ற்கும் மேற்பட்டோர் தற்பொழுது இவ் அறிவிப்பை விடுத்துள்ளனர்.

பாரிஸில் அண்மையில் இடம் பெற்ற உயர்மட்ட அதிகாரிகளுடனான சந்திப்பின்போதே இவ் விஞ்ஞானிகள் இந்த அறிவிப்பை விடுத்தனர்.

அத்துடன், அடிப்படை ஆராய்ச்சிகளுக்குப் பிரான்ஸ் அரசாங்கம் ஆதரவு வழங்கவேண்டும் என்ற மகஜரில் சுமார் 65ஆயிரம் விஞ்ஞானிகள் கையொப்பமிட்டுள்ளதாக விஞ்ஞானிகள் சங்கத்தின் கூட்டு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(து-18)



சென்னை வியாசர் பாடியை அடுத்த எருக்கஞ் சேரியில் உள்ள ஒரு வீட்டில் நேற்று ஏற் பட்ட தீ விபத்தில் இளம் பெண்ணும் 2 குழந்தைகளும் தீயில் கருகி பரிதாபமாக உயிரிழந்தனர். விபத்தில் முழுமையாக எரிந்த வீடு.

# சார்ஸ் நோய்க்கு புதிய மருந்து சீன விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

சார்ஸ் நோய்க்கு சீனாவில் புதிய மருந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு சார்ஸ் நோயினால் சீனா மிகவும் பாதிக்கப்பட்டது. உலகையே உலுக்கிய இந்த நோய்க்கு மருந்து கண்டுபிடிக்க பல நாடுகள் ஆய்வில் தீவிரமாக ஈடுபட்டன.

இந்நிலையில் சார்ஸ் நோய்க்கான மருந்தைக் கண்டுபிடித்துள்ள சீனா அதைச் சோதனை அடிப்படையில் ஆய்வு செய்து வருகிறது. இந்த மருந்து 30 பேருக்கு அளிக்கப்பட்டு அவர்களுடைய நோய் எதிர்ப்பு சக்தி குறித்து கண்காணிக்கப்பட்டது. சீன விஞ்ஞானிகளால் கண்டுபிடிக்கப்பட்ட இந்த மருந்து ஆரம்பக் கட்டப் பரிசோதனை நிலையில் இருப்பதாக அந்த நாட்டு சுகாதாரத் துறை தெரிவித்தது.

கடந்த ஆண்டில் இந்த நோய்க்கு 900 பேர் பலியானார்கள். 8 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டனர்.

ஆரம்பக்கட்ட பரிசோதனைகள் பெய்ஜிங் உள்ளிட்ட பல இடங்களில் நடத்தப்பட்டிருக்கிறது

விலங்குகளுக்கு இந்த மருந்தைக் கொடுத்து ஆய்வு நடத்தியதில் மிகவும் பாதுகாப்பானதாகவும், நோயைக் கட்டுப்படுத்தும் சக்தி அதிகம் உள்ளதாகவும் தெரிய வந்துள்ளது என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனிடையே சார்ஸுக்கு மருந்து கண்டுபிடிப்பதில் உலக அளவில் விஞ்ஞானிகள் தீவிர ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகிறார்கள்.

சீனா கண்டுபிடித்துள்ள மருந்தை சாப்பிடுவதால், உடல் வலியும், லேசான காய்ச்சலும் ஏற்படலாம் என்றாலும், உடலில் இயற்கையாக உள்ள நோய் எதிர்ப்பு சக்தியால் அது விரைவில் தானாகவே குணமடைந்துவிடும் என்றும் சீன விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

உலகஅளவில் இந்த நோய்க்கு பத்து வகையான மருந்துகள் இதுவரை கண்டு பிடிக்கப்பட்டுள்ளன என்றாலும், அவை அனைத்தும் பரிசோதனை நிலையிலேயே இருக்கின்றன.

### உலக சாதனைக்காக 49 நாள் உண்ணாவிரதம்

உலக சாதனை படைக்க வேண்டும் என்பதற்காக 49 நாள் உண்ணாவிரதத்தைத் தொடங்க இருக்கிறார் 50 வயதான சீன மூலிகை மருத்துவர் சென்ஜி யான்மின்.

அமெரிக்க மாஜிக் நிபுணர் டேவிட் பிளைன் கடந்த அக்டோபரில் 44 நாள் தொடர்ந்து உண்ணாவிரதம் இருந்து உலக சாதனை படைத்துள்ளார். அந்த சாதனையை முறியடிக்க 49 நாள் உண்ணாவிரதத்தை வரும் 20-ம் திகதி தொடங்குகிறார் சென்ஜியான்மின்.

ஒரு மனிதனால் சராசரியாக 7 நாட்களுக்கு மேல் உணவின்றி இருக்க முடியாது என்று மேற்கத்திய மருத்துவ நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (து)

# பின்லேடனைப் பிடிக்க அதி உயர் தொழில்நுட்பம்

சர்வதேச பயங்கரவாதி ஒஸாமா பின்லேடனின் இருப்பிடத்தைக் கண்டு பிடிக்க சக்திவாய்ந்த மென்பொருள் தொழில்நுட்பத்தை அமெரிக்கா பயன்படுத்தி வருவதாக நியூயோர்க் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஈராக் அதிபர் சதாம் ஹுஸைனைப் பிடிக்க 'டாஸ்க் ஃபோர்ஸ் 121' என்ற அமைப்பின் உதவியை அமெரிக்கா நாடியதாம். அதே அமைப்பின் உதவியுடன் பின்லேடனைப் பிடிக்கவும் அமெரிக்கா முயன்றுவருகிறது.

அமெரிக்க ராணுவம் மற்றும் உளவுத்துறை அதிகாரிகள் அனலிஸ்ட் நோட்புக் என்ற மென்பொருள் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பின்லேடன் குறித்த தகவல்களைச் சேகரித்து வருகின்றனர். இந்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தித் தான் சதாம் ஹுஸைனைப் பிடித்தனராம்.

இத்தொழில்நுட்பம் மூலம் ஒசாமா பின்லேடன் ஒளிந்திருக்கும் இடத்தைக் குறித்து துல்லியமாக தகவல்களை அறியமுடியுமாம்.

ஆப்கானிஸ்தானுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே ஒசாமா அடிக்கடி இருப்பிடத்தை மாற்றி அலைந்து கொண்டிருப்பதாக தெரிய வந்துள்ளது.

"டாஸ்க் ஃபோர்ஸ் 121க்கு" தலைமைவகிப்பவர் முன்னாள் கடற்படை அதிகாரியும் தற்போதைய ரியர் அட்மிரலுமான வில்லியம் எச்.மெக்ராவென் என்பவர் ஆவார்.

அமெரிக்கா கண்டு பிடித்து விடும் என்ற அச்சத்தில் தொலைத்தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்த பின்லேடன் தயங்குகிறார். இந்நிலையில் பின்லேடனுக்கு செல்லக்கூடிய கூரியர்கள் மீதுமெக்ரேவன் படையினர் ஆர்வம் காட்டுகின்றனர்.

இது தொடர்பாக ஓரளவு வெற்றியும் கிடைத்துள்ளது.

இதுவரை கிடைத்துள்ள தகவல்களின்படி பின்லேடன் இயங்கும் இடம் குறித்து திட்டவட்டமாக தெரிய வந்துள்ளதாம்.

இரண்டு மாதங்களுக்கு முன் அல்-கெய்டா முக்கிய தலைவர்களில் ஒருவரான ஜாஸன் கௌல் என்பவரை அமெரிக்கப் படைகள் பிடித்தன. அவரிடமிருந்து கைப்பற்றிய ஆவணங்கள் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. பாகிஸ்தான்-ஆப்கான் எல்லைப் பகுதியில் ஏதோ ஓரிடத்தில் பின்லேடன் பதுங்கியிருப்பதை அமெரிக்காவின் ஆள் இல்லாத விமானம் கண்டுபிடித்துள்ளது. கடந்த ஜனவரிமாதவக்கில் அமெரிக்கா தாக்குதல் நடத்தக் கூடும் என்ற தகவல் வெளியானதும், அல்-கெய்டா உயர்நிலைத் தலைவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு தப்பிச் சென்றுவிட்டனர் என்று தலிபான் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (து)

# 5000 புறாக்கள் ஆற்றில் மூழ்கிச் சாவு

தைவான் கடலோரப் பகுதியில் புறாப் பந்தயம் சட்ட விரோதமாக நடைபெற்று வருகிறது. அதற்காக கூண்டில் அடைக்கப்பட்டு 5 ஆயிரம் புறாக்கள் படகில் எடுத்துச் செல்லப்பட்டன.

ஆற்றில் படகு சென்று கொண்டிருந்த போது, கூண்டோடு அத்தனை புறாக்களும் ஆற்றில் விழுந்தன. அதில் 5 ஆயிரம் புறாக்கள் இறந்தன.

புறாப் பந்தயம் சட்ட விரோ தமானது என்றாலும், அதில் எந்தப் புறா வெற்றி பெறும் என்பதற்கான பந்தயம் கட்டும் சூதாட்டத்தில் சுமார் ரூ.15 கோடி வரை புரளும்.

சட்ட விரோதமானது என்று அறிவிக்கப்பட்ட போதிலும், புறாப் பந்தயங்கள் நடைபெறுவதைச் சீன அரசு கண்டு கொள்வதில்லை.

புறாக் கூண்டுகள் கட்டப்பட்டிருந்த சங்கிலி அறுந்ததால் கூண்டு, கூண்டாக புறாக்கள் ஆற்றில் மூழ்கி இறந்தன.

இதைத் தொடர்ந்து புறாப் பந்தயம் ரத்து செய்யப்பட்டது. (து)



சென்னை மெரீனா கடற்கரையில் உள்ள மெரீனா நீச்சல் குளம் அருமையாக புதுப்பிக்கப்பட்டு புதுப்பொலிவுடன் உள்ளது. உலகிலேயே இரண்டு நீச்சல் குளங்கள் மட்டுமே 50 மீட்டருக்கும் அதிகமான நீளமுடையவை. அவற்றில் ஒன்று பிரேசில் தலைநகர் ரியோடி ஜெனிரோவில் உள்ளது. மற்றொன் று மெரீனா கடற்கரையில் உள்ளது. பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் வெள்ளைய நிர்வாகிகள் கடற்கரையில் கூடி பொழுதைப் போக்க கட்டப்பட்ட உல்லாசப் பகுதியின் ஒரு அங்கமாக இந்த நீச்சல் குளம் கட்டப்பட்டது. சென்னை மாநகராட்சி பராமரித்து வரும் இந்த நீச்சல் குளம் விரைவில் பொதுமக்களுக்கு திறந்துவிடப்படும்.

# அமெரிக்க அதிபர் தேர்தலில் சுவாரஸ்யம் புஷ் - கெரி இருவரும் உறவினர்களாம்

அமெரிக்க அதிபர் பதவிக்கான தேர்தல் களத்தில் சுவாரஸ்யமான திருப்பம் ஏற்பட்டுள்ளது.

அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷை எதிர்த்து ஜனநாயகக் கட்சியின் சார்பில் போட்டியிடும் ஜான்கெரியின் மூதாதையர்கள் யார் என்ற சுவாரஸ்யமான ஆராய்ச்சியில் பத்திரிகைகள் தற்போது இறங்கியுள்ளன. அவாகளது ஆராய்ச்சியின் பயனாக ஜோர்ஜ் புஷ்ஷும் ஜான் கெரியும் தூரத்துச சொந்தம் என்ற விடயம்தெரியவந்துள்ளது.

முதலில் ஜான் கெரியின் மூதாதையர்கள் யார் என்ற ஆராய்ச்சியில்தான் பத்திரிகைகள் இறங்கின. ஆனால், கெரியின் உறவினர்களாக இருப்போர், அதிபர் புஷ்ஷுக்கும் சொந்தமாக இருப்பது தெரியவந்தது. உடனே இருவரது பூர்வோத்திரத்தையும் பத்திரிகைகள் ஆராயத் தொடங்கிவிட்டன. இது குறித்து வாஷிங்டன் டைம்ஸ் இதழில் கிஸ்ஸிங் கஸின்ஸ் என்ற தலைப்பில் செய்தி வெளியாகியுள்ளது.

புஷ்-கெரி இருவரது குடும் பங்களின் மூதாதையர்களைப் பற்றிய வரைபடத்தைப் பார்த்த போது, ஏற்கனவே கூறப்பட்டதை விட, இரு குடும்பங்களுக்கும் இடையே நெருக்கமான உறவு இருப்பது தெரியவந்துள்ளது. குடும்பக் கிளைகளை ஆராயும் இணையத் தளத்தில் இது குறித்த தகவல்களைப் பரிசீலித்தபோது, பல தலைமுறைகளுக்கு முன்பிருந்தே இருவரின் குடும்பங்களும் சொந்தம் என்பதும், அவர்கள் இருவரும் உறவினர்கள் என்பது தெரியவந்துள்ளது.

பொழுதுபோக்குப் பூங்காவின் தந்தை வால்ட் டிஸ்னி, பிரபல நடிகர்கள் மைக்கல் டக்ளஸ், கிளின்டன்ஈஸ்வுட், விமானத்தைக் கண்டுபிடித்த ரைட் சகோதரர்கள், மெரிவெதர் லூயிஸ், ஹக்ஹெப்னர், கிளாராபார்ட்டன், இளவரசி டயானா ஆகியோர் புஷ், ஹெரியின் இவருரது குடும்பங்களுக்கும் உறவினர்கள் என்ற சுவாரஸ்யமான விஷயமும் இந்த ஆய்வில் தெரியவந்துள்ளது.

அத்தோடு, அரச குடும்பத்தவர்களும் அவர்களுக்கு உறவாக இருப்பது தெரியவந்துள்ளது. அல்பேனியா நாட்டின் பட்டத்து இளவரசி லேகா, இத்தாலி இளவரசி இம்மனுவேல், ஃபிலிப்பெட்டோ, ருமேனியாவின் பட்டத்து இளவரசி மாக்கறீட்டா, சுவீடனின் இளவரசி விக்ரோறியா, கிறீஸ் இளவரசி அலக்சாண்டர் ரீயா, ஸ்பெயின் இளவரசி ஃபெலிப் ஆகியோரும் புஷ்-ஹெரி குடும்பத்திற்கு உறவு என்று இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி அமெரிக்கா சுதந்திரப்போரின் போது புரட்சிக்காரர்களுக்கு துரோகம் செய்து விட்டு பிரிட்டிஷ் பக்கம் தாவிய பெனடிற் ஆர்னட், முன்னாள் அமெரிக்க அதிபர் றொனால்ட் றீகனைத் துப்பாக்கியால் சுட்டுக் காயப்படுத்திய ஜூனியர் ஜான் கிங்லி ஆகியோரும் புஷ்- கெரியின் மூதாதையர் வழி வந்தவர்கள் தான் என்பது தெரியவந்துள்ளத்து என்று வாஷிங்டன் டைம்ஸ் தெரிவித்துள்ளது. (து)


# ஊட்டச் சத்துக்களை வீணாக்காது காப்போம்

எல்லா உணவுப் பொருட்களிலும் ஒரே வகையான, ஒரே அளவுள்ள ஊட்டச்சத்துக்கள் அடங்கியிருப்பதில்லை. எல்லா ஊட்டச்சத்துக்களுமே ஒரு உணவுப்பொருளில் அடங்கியிருப்பதில்லை. இந்தக் கட்டுரை ஊட்டச்சத்துக்களை இழக்காமல், உணவுப் பொருட்களை எப்படி பயன்படுத்துவது என்பது குறித்து விவரிக்கிறது. நாம் உணவுப் பொருட்களைப் பயன்படுத்தும் விதத்தில் முக்கிய ஊட்டச் சத்துக்களை இழந்துவிடுகிறோம். எனவே, இத்தகைய ஆலோசனையை நாம் பெற்றுக்கொள்ளவேண்டியது மிகவும் அவசியமாகும். உதாரணமாக, விற்றமின் சி-யை எடுத்துக் கொள்வோம். விற்றமின் சி-யானது வெகு சீக்கிரத்தில் அழிந்துபோய் விடுவதால், அது இழக்கப்படாமல் இருப்பதற்காக எடுக்கப்படும் முயற்சிகள், மற்ற ஊட்டச் சத்துக்களையும் பாதுகாக்க உதவுகின்றது.

### காய்கறிகள்

காய்கறிகள் சேதமடைந்து கன்றிப்போகும் போது அவை ஊட்டச்சத்துக்களை இழக்கவேண்டியதாகின்றது. எனவே, காய்கறிகளை கீற்றுகளாக அரிவதற்கும் துண்டுகளாக வெட்டுவதற்கும் கூர்மையான கத்திகளைப் பயன்படுத்தவேண்டும்.

காய்கறிகள் புத்தம் புதிதாக வைக்கப்படுமானால் அவை ஊட்டச்சத்துகளை இழப்பதில்லை. எனவே காய்கறிகளை குளிர் சாதனப்பெட்டியில் வைத்துப் பாதுகாக்கவேண்டும். அல்லது அன்றன்று காய்கறிகளை புத்தம் புதிதாக வாங்கிப் பயன்படுத்தவேண்டும். வாடிப்போன காய்கறிகள் மலிவாக கிடைக்கலாம், ஆனால் அவைகளினின்று நீங்கள் பெறும் ஊட்டச் சத்து மிகக் குறைவானதே. வாடிச் சோர்ந்து போன காய் கறிகள் நம் மையும் வாடிச் செய்யும் என்பதை மறவாதீர்கள். பச்சைப் பட்டாணியின் மேல் உறையை, சமைப் பதற்கு சற்று முன்னர் உரித்தால் போதும். மற்றும் பீன்ஸ் வகை களை இந்த முறையிலே சமை யலுக்கு பயன்படுத்துங்கள். சரியாகப் பழுக்காத தக்காளியை, துணியால் மூடிவைக்கப்பட்டிருக்கும் அறையின் வெப்பத்துக்கு ஏற்றவாறு தானாகப் பழுக்கும் படி செய்யுங்கள். பழுத்துக் கொண்டிருக்கும் தக்காளியை குளிர்சாதனப் பெட்டியில் வைப்பதைத் தடுக்கவும். காய்கறிகளை குளிர்ந்த ஈரப்பதம் உள்ள இடங்களில் வைத்துப் பாதுகாப்பது நல்லது. சில இடங்களில் காய்கறிகளை பசுமையாக வைத்துப் பாதுகாப்பதற்காக அகன்ற மண்சாடிகள் பயன்படுத்தப்படுகின்றன.



### காய்கறிகளை சமைத்தல்

ஊட்டச்சத்துக்களை இழந்து விடாமல் பாதுகாப்பதற்காக பின் வரும் முறையைக் கையாளுங்கள். மிகச்சிறந்த முறைகளில் இதுவும் ஒன்றாகும். தேவையான அளவு நீரை மாத்திரமே ஊற்றி காய்கறி மென்மையடையும் வரை மாத்திரமே வேகவைத்து (அடிப்பிடிக்காமல்) எடுக்கவேண்டும். இறுக்கமான மேல் மூடியையுடைய பாத்திரத்திலே வேக வையுங்கள். இதனால் நீராவி வெளியே செல்வது தடை செய்யப்பட்டு சிறிதளவு நீரில் காய்கறிகள் சீக்கிரமாக வேக வைக்கப்படமுடிகிறது. அதனால், விற்றமின்கள் பி, சி மற்றும் நீரில் கரைந்து போகும் விற்றமின்கள், தாதுப்புக்கள் வீணாகிவிடாதபடி காக்கமுடியும்.

கரட், சீனிக்கிழங்கு, உருளைக் கிழங்கு போன்றவைகளின் தோலை சீவியோ, குறுக்காக வெட்டியோ வேகவைப்போமானால் ஏராளமான ஊட்டச்சத்து வெளியேறிவிடுகின்றன. எனவே, இத்தகைய உணவுப் பொருட்களில் உள்ள விறறமின்களையும், தாதுப்புக்களையும் பாதுகாக்கவேண்டுமானால் அவைகள் தோலுடன் வேகவைக்கப்பட வேண்டும். பாத்திரத்தில் சிறிதளவு எண்ணெய் ஊற்றி காய்கறிகளை அதில போட்டு கிளறி வேகவைப்பது சிறந்த முறையாகும். ஆனால், பிரஷர் குக்கரில் போட்ட உணவுப் பொருள குறிப்பிட்ட நேரத்துக்கு வேகவைத்து எடுக்கப்படவேண்டும். நீண்டநேரம் வேகவைக்கப்படு மானால் ஏராளமான ஊட்டச் சத்துக்களை இழக்க நேரிடும். நேரத்தை மிச்சப்படுத்துவதற் கான அடுத்த வேளைக்கான உணவையும் ஓரே வேளையில் சமைத் துவ|ட முறபடலாம். இவ்வாறு செய் வதனால் நீங்கள் ஏராளமான ஊட் டச் சத்துக்களை இழந்து விடு கிறீர்கள். சமைத்த உணவுகளை மீண்டும் மீண்டும் சுடவைத்து உண் பதினால், ஊட்டச்சத்து இழப்பு ஏற்படுகிறது. காய்கறி உணவுகளை நீண்டநேரம் மீண்டும் வேகவைப் பதால் ஊட்ட்ச்சத்துக்ளை குறிப் பாக விற்றமின் சி-யை ,அதிகமாக இழக்க வேண்டியதாகிறது. ஒரு நாள் முழுவதும் குளிர்சாதனப் பெட்டியில் வைத்துவிட்டு அடுத்த நாள் எடுக்கப்படும் உணவில் விற்றமின் சி-யானது முக்கால் பகுதி மாத்திரமே தங்கியிருக்கும். இரண்டு நாட்களுக்குப் பிறகு மூன்றில இரண்டு பகுதி விற்றடமின சி சத்து மாத்திரமே மீந்திருக்கும்.

### பழங்கள பழச்சாறுகள்

பழங்களில் விட்டமின் ஏ,சி மற்றும் விற்றமின்களும் கல்சியமும் இரும்புச் சத்தும் காணப் படுகின்றன. நாரத்தை, எலுமிச்சை போன்ற பழங்களில் விற்றமின் சியின் அளவு ஏராளமான ஊட்டச் சத்து இழப்பு எதுவும் இன்றி இப் பழங்களை நீண்ட நாளுக்கு மேல் சேமித்து வைக்கமுடியும். உறை விக்கப்பட்டு, டின்களில் சேமித்து வைக்கப்படும் பழங்களிலும் பழ இரசங்களிலும் ஓரளவுக்கு மாத்திரமே ஊட்டசத்து இழப்பு ஏற்படுகின்றது.

### தானியங்கள்

கம்பு, கோதுமை, சோளம், அரிசி, கீழ்வரகு போன்ற தானியங்களினின்று செய்யப்பட்ட ரொட்டி, பிஸ்கட், கேக், பிட்டு, உப்புமா, இட்லி, தோசை போன்ற உணவுப் பண்டங்களை நாம் நுகர்கின்றோம். இந்தத் தானியங்களை உணவிற் காக எப்படித் தயார் செய்கிறோம் என்பதைப் பொறுத்துத்தான் அவைகளினின்று எவ்வளவு ஊட்டச் சத்தைப் பெற்றுக்கொள்ளுகிறோம என்ற காரியத்தைத் தீர்மானிக்க முடியும். இயந்திரங்களில் போட்டு தானியங்கள் அரைக்கப்படும் போது ஏராளமான ஊட்டச் சத்துக்கள் வீணாகிவிடுவதுண்டு.

தானியங்களில் நின்று விற்றமின் பி-யை [illegible]மாகப் பெற்றுக் கொள்ளலாம். அரிசி,கோதுமை ஆகிய தானியங்களின் முளையிலும் வெளி உறையிலும் விற்றமின் பி செறிந்திருப்பதை நாம் அறிந்திருக்கலாம். எனவே, அவைகளை அதிகமாகத் தீட்டாதபடி உண்பதே சிறந்தது. கடைகளில் சிவப்பு அரிசி, முழுக்கோதுமை மாவினால் செய்யப்பட்ட ரொட்டி மற்றும் பொருட்கள் விற்கப்படுகின்றன. இயந்திரங்களிலே போட்டு தீட்டுமபோது அவற்றின் முளையும் வெளி உறையும் வீணாகிப்போய் விடுவதை நாம் உணரவேண்டும்.

### சமைத்தலில் ஏற்படும்இழப்பு

ஏராளமான நீரில் தானியங்களைப் போட்டு நன்றாக வேக வைத்து பின்னர் நீரை வடித்துவிடும் போது ஊட்டச்சத்துக்கள் வீணாகி விடுகின்றன.

**எஸ்.ஜீவா**

சமைப்பதற்கு முன் அரிசியைக் கழுவவேண்டும் என்ற காரியத்தில் நாம் பிடிவாதமாக இருக்கிறோம். அரிசியைக் கழுவி சமைப்பதனால் நாம் ஊட்டச் சத்துக்களை இழந்து விடுகிறோம். அரிசியானது நன்றாக சுத்தம் செய்யப்பட்டு பக்கெட்டுகளில் போட்டுவைக்கப்பட்டிருக்குமானால் வீணாகத் திரும்பக் கழுவி ஊட்டச்சத்துக்களை இழக்கத் தேவையில்லை. சமையலுக்கு முன ஒருமுறை வெள்ளை அரிசிகழுவபட்டால் 25 வீதம் தயமின் எனப்படும் ஊட்டச்சத்தை இழந்து விடுகிறோம். சிவப்பு அரிசி அல்லது அரைவேககாடாக நெல்லை வேகவைத்து பெறப்படும் அரிசியை 10 வீதம் தயமினை இழந்து விடுகிறோம். அரியை தங்களது உணவாக உண்பவர்கள் இந்த இழப்பை நன்கு அறிந்திருக்கவேண்டும். வேகவைத்து நீரை வடிகட்டாமல் சரிதண்ணீர் வைத்து அரியை சமைப்பது மிகவும் நல்லதொரு பழக்கமாகும். ஏனெனில் இம்முறை யில் ஊட்டச்சத்துக்கள் காக்கப்பட்டு வேகும போது உள்ளே ஈர்க்கப்படுகின்றன.

ரொட்டி போன்றவைகளை டோஸ்ட் (Toast) செய்யும் போதே தயமின் இன்னும் அதிகமாக இழக்கிறோம். ரொட்டித் துண்டுகள் கெட்டியாக இருக்குமானால் தயமின் இழப்பு சிறிதளவே ஏற்படும்.

தானியங்களினால் செய்யப்படும் உணவுப் பொருட்கள் வேக வைக்கப்படும் போது மேற்பகுதி இலேசான பிரவுண் நிறத்தில் காணப்படுமானால், தயமின் சத்தை நன்முறையில் பாதுகாக்கலாம். □

# டோக்கியோ பிரகடனத்தை நிராகரிப்பவர்கள் எவ்வாறு சமாதானத்தை நிலைநாட்டுவர்?

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கேள்வி

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத தீர்வுகாணும் வகையில்



டோக்கியோ மாநாட்டில் வெளியிடப்பட்ட பிரகடனத்தை நிராகரித்து வருபவர்கள் எவ்வாறு சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வார்கள் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கேள்வி எழுப்பியுள்ளார்.

வலப்பனையில் நேற்று முன் தினம் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே பிரதமர் இக்கேள்வியை எழுப்பினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் சமாதான முயற்சிகள் வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லப்படும் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கூறி வருகின்றார்.

ஆனால்,ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் இணைத் தலைவர் சோமவன்ச அமரசிங்க டோக்கியோப் பிரகடனம் ஜனநாயகத்திற்கு விரோதமானது என்றும் அதனை முற்றாக தாம் நிராகரிப்பதாகவும் கூறிவருகின்றார்.

இந்நிலையில் ஜனாதிபதியோ அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினரோ, சமாதான முயற்சிகளை எவ்வாறு முறையாக முன்னெடுத்துச் செல்வார்கள் என்பது சந்தேகமாகவே உள்ளது,

இதே சமயம், இதுவரை நாம் மேற்கொண்டு வந்த சமாதான நடவடிக்கைகளில் சில குறைபாடுகள் இருக்கின்றதை நாம் மறுக்கவில்லை. அக்குறைபாடுகளை தற்போது ஆராய்ந்து இனங்கண்டுள்ளோம்.

எனவே, எதிர்காலத்தில் எமது கட்சி ஆட்சிக்கு வரும் போது சுலபமாகவும் வெற்றிகரமாகவும் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இதனையே நாம் மக்களுக்கு உறுதியாகக் கூறிவைக்க விரும்புகிறோம்.

அத்துடன், ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிக்கு வந்ததும் மீண்டும் உடனடியாக சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டு தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணப்படும் என்றார்.(தி-61,10)

# திடமான முடிவை எடுக்கும் வலிமை ஐக்கிய தேசிய முன்னணிக்கு இல்லை

## அனுராபண்டாரநாயக்க ஏளனம்

(கொழும்பு)

நாட்டைப் பாதுகாக்கும் விடயத்தில் சரியான முடிவை எடுக்க கூடியவரும், அதனை நடைமுறைப் படுத்தப்படக்கூடியவருமான ஒருவரே தலைவராக இருக்க முடியும் என ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான அனுராபண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

கம்பஹா மாவட்டத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொணடு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரைநிகழ்த்துகையில்,

முன்னொருகாலத்தில் இவ்வாறான தகைமைகள் கொண்ட தலைவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்தவர்கள், அவர் நாட்டிற்கும் நல்ல சேவையாற்றினார்கள்.

ஆனால், தற்போது ஐக்கியதேசிய கட்சியில் இத்தகைய தகைமைகள உடைய சிறந்த தலைவர்கள் இல்லை.

இதனாலேயே அவர்கள் சமாதான பேச்சுவார்த்தைகளை தொடர்ந்து நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.அதுமட்டுமன்றி நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுக் கொண்டிருப்பதை அவதானித்துக் கொண்டிருந்த ஐக்கிய தேசிய கட்சித்தலைவர், நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு சரியான முடிவை எடுக்கத்தவறிவிட்டார்.

இதனாலேயே ஜனாதிபதி பாதுகாப்பு, உள்துறை தொடர்பாடல் ஆகிய அமைச்சுக்களைப் பொறுப்பேற்றார்.

இது ஒரு புறமிருக்க இவர்களிடம அதாவது ஐக்கிய தேசியக் கட்சியல் அங்கம் வகிக்கும் முக்கிய பிரதிநிதிகளிடம் உறுதியான மனப் பக்குவம் இல்லை.

ஏனெனில், ஜே.வி.பிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் இடையே செய்து கொள்ளப்பட்ட கூட்டமைப்பிற்கு ஆரம்பத்தில் எதிர்ப்புத் தெரிவித்து ஐக்கியதேசியக் கட்சிப் பிரமுகர்கள் சிலர், தற்போது அக் கூட்டணியில் இணைந்து கொண்டுள்ளார்கள் எனவும் அவர் அங்கு சுட்டிக்காட்டினார். (தி-61,10)

அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல். -குறள்

வலம்புரி

# தூதுவர் எரிக்சொலின் இலங்கை விஜயம்

நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சொல் ஹேய்ம் இலங்கைக்கு விஜயம் செய்து நேற்றைய தினம் யாழ்ப்பாணத்திற்கும் வருகைதந்துள்ளார்.

அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையே சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதில் காரண கர்த்தாவாக இருந்த எரிக்சொல், தற்போதைய சூழ்நிலையில் இலங்கைக்கு வருகைதந்திருப்பது முக்கியத்துவம் வாய்ந்ததோர் நிகழ்வாக அமைந்துள்ளது.

அரசும், புலிகளும் மேற்கொண்ட சமாதான முயற்சிகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ள நிலையில் - நாடு தேர்தலுக்காக களைகட்டியிருக்கும் வேளையில் - விடுதலைப் புலிகளின் தலைமையுடன் மட்டு. அம்பாறை மாவட்ட சிறப்புத்தளபதியாக இருந்த கருணா கருத்து முரண்பாட்டைக் கொண்டிருக்கும் நேரத்தில், எரிக்சொல்ஹெய்ம் கொழும்பு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்வது தமிழ்மக்களுக்கு ஓர் ஆறுதலைத் தருவதாக உள்ளது.

சமாதான முயற்சிகளின் பயனாக ஆறு சுற்றுப்பேச்சுவார்த்தைகள் நடைபெற்று முடிந்த வேளையில், ஏழாவது சுற்றுப் பேச்சுக்கள் ஆரம்பமாவதற்கு முன்னதாகவே பாராளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தலுக்கான திகதிகள் அறிவிக்கப்பட்டது. இதனால், சமாதான முயற்சிகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

எனினும், விடுதலைப் புலிகள் சமாதானத்தின் மீது கொண்டுள்ள பற்றுறுதி காரணமாக அரசுடன் செய்துகொண்ட யுத்தநிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் கடைப்பிடித்து வருகின்றனர்.

அதேவேளை, பாதுகாப்பு அமைச்சைத் தனது அதிகாரத்தின்கீழ் எடுத்துக்கொண்ட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா சர்வதேசத்தின் அழுத்தம் காரணமாக விரும்பியோ, விரும்பாமலோ யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிக்கவேண்டியதோர் சூழ்நிலைக்குத்தள்ளப்பட்டார்.

அவ்வகையில், கடந்த 20 வருடகாலமாக நடைபெற்று வந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்த பெருமை நோர்வே அரசுக்கும் அந்நாட்டின் தூதுவர் எரிக்சொல்ஹேய்முக்குமே உரியது.

இலங்கைவாழ் மக்கள்மீது கொண்ட கருணை காரணமாக நோர்வே நாடு தனது பணியை மிகத் தூய்மையாகச் செய்து வருகின்றது.

இலங்கையில் சமாதானத்ததை ஏற்படுத்த வேண்டும் என எண்ணியதற்காக நோர்வே நாட்டின் தேசியக் கொடியை இந்நாட்டின் புத்தபிக்குகள் எரியூட்டினர். கண்காணிப்புக் குழுத் தலைவர் மீது அபாண்டமான பழியைச் சுமத்தி அவரை நாட்டில் இருந்து வெளியேற்றுவதில் ஜனாதிபதி மும்முரமாக ஈடுபட்டார்.

இவ்வாறு பெரும் தீமைகளை அனுபவித்த போதிலும், தனது உயர்ந்த குணத்தை - பெருந்தன்மையை நோர்வே அரசும், தூதுவர் எரிக்சொல்ஹேய்மும் கடைப்பிடித்து வருவது போற்றுதற்குரியது.

இலங்கையில் நிலவும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு பேச்சுக்கள் மூலமாகவே எட்டப்படவேண்டும் என சிங்கள ஆட்சியாளர்கள் கூறிவருகின்ற போதிலும், அவை உதட்டளவோடு நின்றுவிடுகின்றனவே தவிர இதுகாறும் செயலுருப் பெறவில்லை.

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக விடுதலைப் புலிகள் காலத்திற்குக் காலம் சிங்கள அரசுகளுடன் பேச்சுவார்த்தைக்குச் சென்றபோதிலும், அரசாங்கங்கள் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதனையும் எடுக்காததன் காரணமாக யுத்தம் நீடிக்கவேண்டியதோர் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. ஆனால், இப்போது அந்நிலைமை இல்லை.

நோர்வே நாடு நடுநிலையோடு நின்று சமாதான முயற்சிகளை முன்னெடுத்து வருவதோடு, இருதரப்பும் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை எந்தத்தரப்பும் மீறாதவகையில் பார்த்துக்கொள்வதற்காக, கண்காணிப்புக் குழுவையும் அமைத்துள்ளது. இதன் காரணமாகவே ஆட்சிக்கலைப்பின் பின்னரும்கூட யுத்தநிறுத்தம் நின்று நிலைக்கின்றது.

இதேவேளை, இலங்கை அரசிற்கும், ஜனாதிபதிக்குமிடையே ஏற்பட்ட அதிகார இழுபறி நிலையைத் தொடர்ந்து சமாதான முயற்சிகளை நோர்வே தற்காலிகமாக இடைநிறுத்திவைத்த போதிலும், தூதுவர் எரிக்சொல் மீண்டும் இலங்கைக்கு வருகை தந்திருப்பது சமாதானத்தின் மீதான அவநம்பிக்கைகளைக் களைவதாக அமைந்துள்ளது.

# புலிகள் இயக்கத்தை பிளவுபடுத்த சில அரசியல் சக்திகள் முயற்சி

## முன்னாள் எம்.பி. குற்றச்சாட்டு

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து விலகியுள்ள மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டத் தளபதி கருணாவை மீண்டும் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைத்து ஒற்றுமையுடன் செயற்பட சகல தமிழ் மக்களும் ஒன்றுதிரண்டு செயற்படவேண்டும்.

தமிழ்மக்களின் உரிமைகளுக்காகபட போராடி அவர்களின் பிரச்சினைகளைச் சர்வதேச சமூகத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் தற்போது ஏற்பட்டுள்ள பிளவு நிலைக்கு முற்றுப்புள்ளி வைத்து விடுதலைப் புலிகள் இயக்கத்தில் பலவீனத்தை ஏற்படுத்தாதிருப்பதற்கு மக்களே உதவவேண்டும்.

இவ்வாறு பதுளை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வேலாயுதம் தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றிற்கு அவர் அளித்த விசேட செவ்வியிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் வழங்கிய செவ்வியில், தமிழ்பேசும் மக்கள் அனைவரும் ஒற்றுமைப்படவேண்டிய நேரத்தில் தமிழ்மக்களுக்காகப் போராடிய தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திலேயே பிளவு ஏற்பட்டிருப்பது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும்.

எந்தவொரு கட்சிகளிடத்திலேயோ அல்லது இயக்கத்திலேயோ பிளவுகள், முரண்பாடுகள் ஏற்படுவது வழமைதான்.

ஆனாலும், சமாதானம் மலர்கின்ற சமயத்தில், சமாதானத்திற்காக மக்கள் ஏங்கிக்கொண்டிருக்கின்ற நேரத்தில் இத்தகையதொரு பிளவு ஏற்பட்டிருப்பது கவலைப்படவேண்டியதாகும்.

தமிழ் மக்களுக்காகப் போராடி அவர்களின் தன்மானத்தைக் காப்பாற்றிவந்த விடுதலைப் புலிகள் இன்று தங்களுக்கிடையே பகைமையை வளர்த்துப் பதவிகளுக்காகப் பிரிந்து செல்ல முயல்வது தமிழ்மக்களுக்குப் பெரும் அவமானத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. அந்நிய ஆக்கிரமிப்பில் இருந்து மக்களை விடுவித்துக்கொள்ளப் போராடிவந்த விடுதலைப் புலிகள் இன்று தமக்குள்ளேயே பகைமையை வளர்த்துக்கொண்டு தமிழ்மக்களின் கோபத்திற்குள்ளாகின்றார்கள்.

வடக்கு மக்களை வேறாகவும், கிழக்கு மக்களை வேறாகவும் பிரித்துப் பார்க்கின்ற சில தீயசக்திகளின் செயற்பாட்டுக்குத் துணைநின்று தமிழ்மக்களின் ஒற்றுமையையே சின்னாபின்னமாக்குகின்றார்கள். இதற்குச் சில அரசியல்வாதிகளும் பின்னணியில் இருந்து முயற்சிசெய்து வருகின்றார்கள்.

இந்தநிலையை மாற்றுவதற்குத் தமிழ்மக்கள் முன்வரவேண்டும். தமிழ்மக்களின் ஒற்றுமையைச் சீர்குலைக்க முயலும் எந்தச் சக்திகளுக்கும் துணைபோகாது அவர்களுக்கு எதிராகப் போராடவேண்டும்.

'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு' என்ற பழமொழியைத் தமிழ்மக்கள் மனதில் கொண்டு மிக ஒற்றுமையாகச் செயற்படவேண்டும். அத்துடன், விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பலவீனப்படுத்தும் வகையில் செயல்படும் சில தீயசக்திகளை இனங்கண்டு மிகவும் அவதானமாக நடந்துகொள்ளவேண்டும்.

விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்தும் அந்த சக்திகள் தமிழ்மக்களின் ஒற்றுமையைச் சீர்குலைத்து அவர்களையும் பலவீனப்படுத்திவிடுவார்கள் என்று அவர் எச்சரித்தார். (தி-61,10)

# தமிழ் மக்களின் விடுதலைக்கு இப் பொதுத்தேர்தல் உதவும்

## புதுவை இரத்தினதுரை நம்பிக்கை

(திருநெல்வேலி)

அடுத்தமாதம் 2ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் மூலம் போர் ஓயுமா? அல்லது தொடருமா? என்பது குறித்து தீர்மானிக்கப்படும். கூடுதலாக தமிழர்கள் விடுதலையைப் பெற இத்தேர்தல் உதவும் என்றே நம்புகின்றேன்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை தெரிவித்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற 'அம்மா நலமா' ஒளிநாடா வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு வெளியீட்டு உரையை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து பேசிய அவர்,

நடைபெறவுள்ள இப் பொதுத்தேர்தல் மூலம் யாழ். மாவட்டத்தை பிரதி நிதித்துவம் செய்யும் வகையில், 9 பேர் பாராளுமன்றத்திற்குச் செல்லவேண்டும். இதனை நான் தனிமனிதனாக அலலாமல், தமிழ்மக்களின் சார்பாகவே கேட்கின்றேன்.

கிழக்கு மாகாணத்தில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமைகள் குறித்து எவரும் குழம்பத் தேவையில்லை. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு காலத்திற்குக் காலம் இவ்வாறான நிகழ்வுகளைச் சந்தித்தே வருகிறது.

எனினும், இவ்வாறான நிகழ்வுகளை எதிர்த்து எமது மண்மீட்புப் போராட்டம் வீறுநடையுடன் செல்கிறது.

ஒரு தனிமனிதனுக்குப் பின்னால் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட மக்கள் நிற்கமாட்டார்கள்.

தமிழ்மக்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கிடையே பிரதேச ரீதியான வேறுபாடுகள் எதுவும் கிடையாது. உண்மைக்குப் புறம்பான செய்திகளைப் பரப்புவதில் ஊடகங்கள் முன்னணியில் நிற்கின்றன. இவைகள் வெளியிடும் உண்மைக்குப் புறம்பான செய்திகளைக் கேட்டு மக்கள் அச்சமோ, குழப்பமோ கொள்ளத் தேவையில்லை.

எமது கடந்தகாலப் போராட்ட வரலாறு இத்தகைய ஊடகங்களின் உண்மைக்குப் புறம்பான செய்திகளையும், குழப்பவாதிகளின் எழுச்சியையும், வீழ்ச்சியையும் கண்டது. இதனால், தற்போதைய கிழக்கு மாகாணம் போன்ற விடயங்களால் நாட்டில் எதுவிதப் பிரச்சினைகளும் எழாது.

இதுவரை காலமும் தேர்தல்பற்றி பேசாத நாம் இன்று தேர்தலைப் பற்றிப் பேசுகிறோம் என்றால், அதற்கெல்லாம் காரணம் ஒன்று இருக்கிறது. தமிழீழ விடுதலைப் புலிகளும், தமிழ்மக்களும் வேறானவர்கள் அல்ல என அவர் மேலும் தெரிவித்தார். (தி-43,18,16)

# வீட்டுக்குள் புகுந்த கும்பல் உரிமையாளரைத் தாக்கியது

(பொன்னாலை)

இரவுவேளை வீடொன்றினுள் திடீரென்று உட்புகுந்த கும்பல் ஒன்று அங்குள்ள பொருட்களை அடித்து நிர்மூலமாக்கியதுடன், வீட்டு உரிமையாளரையும் பொல்லுகள் மற்றும் அலவாங்குகள் கொண்டு மிக மோசமாகத் தாக்கியுள்ளது.

கடந்த வியாழக்கிழமை இரவு 9.45 மணியளவில் அராலி மேற்குப் பகுதியில் இடம்பெற்ற மேற்படி சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

மேற்படி பகுதியைச் சேர்ந்த தவராசா என்பவரின் வீட்டில் றேடியோ ரேப்-செற் பாடிக்கொண்டிருந்தவேளை திடீரென அங்கு உட்புகுந்துகொண்ட குழுவொன்று அவ்வீட்டு உரிமையாளரை மண்வெட்டி மற்றும் பொல்லுகள், அலவாங்குகள், கம்பிகள் என்பவற்றால் மிக மோசமாகத் தாக்கியதுடன், பாடிக்கொண்டிருந்த ரேப்-செற் கருவிகள் உட்பட ஏனைய பொருட்கள் சிலவற்றையும் சின்னாபின்னமாக அடித்து நொருக்கிறது.

இதில் மோசமாகத் தாக்குதலுக்கு இலக்காகிப் படுகாயமடைந்த தவராசா என்பவர் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் பற்றி வட்டுக்கோட்டைப் பொலிஸில் முறைப்பாடு செய்ததையடுத்து அப்பகுதிக்கு விரைந்த பொலிஸார் சம்பவ இடத்தை நேரடியாகப் பார்வையிட்டதுடன், மறுநாள் சம்பந்தப்பட்டவர்களைக் கைதுசெய்து தடுத்துவைத்தனர். பின்னர் கடந்த திங்களன்று சம்பந்தப்பட்ட இரு தரப்பினரையும் விசாரணைக்குட்படுத்திய பொலிஸார், சேதங்களுக்குரிய நஷ்டஈட்டைப் பெற்றுக் கொடுத்து விசாரணைகளை முடித்து வைத்தனர் (தி-49)

### தினசரி தியானம்

### சாயி அருளமுதம்

இறைவன் ஒருவரே. அவர் எங்கும் நிறைந்தவர். உண்மைதான். ஆனால் அந்த ஸர்வ வியாபகத்தின் மீது மனத்தை ஒருநிலைப்படுத்த ஏதோ ஒரு குறியீடோ அல்லது உருவமோ தேவைப்படுகிறது. எல்லாநேரங்களிலும் இறைவன் எங்கும் வியாபித்திருக்கிறார் என்னும் உண்மையை உறுதியுடன் கருத்தில் கொள்வதற்கு "சாதனா" என்ற உளரீதியான நடைமுறையினால் மனம் தெளிவாக் கப்பட்டுச் சுத்திகரிக்கப்பட வேண்டும்.

சுவாமி விவேகானந்தர்.

### தவக்கால சிந்தனை-16

ஒரு ஏழை மனிதனின் வேதனைக்குரிய வாழ்வு இங்கே படம்பிடித்துக்காட்டப்படுகிறது. அன்றும் இன்றும் சமுதாயக்கண்ணோட்டத்தின் படி ஒருவரின் செல்வம், செல்வாக்கு இறைவனின் ஆசீர் என்றும் ஏழ்மை இறைவனின் சாபம் என் றும் நம்பப்படுகிறது. என்னதான் செல்வச் செழிப்பில் வாழ்ந்தாலும் அல்லது ஏழ்மையின் கோரப்பிடியில் வாழ்ந்தாலும் முடிவு ஒன்றே. ஆறடி நிலம் தானே! இதில எந்த வேறுபாடும் இல்லையே! செல்வம் பெற்றிருத்தல் தவறில்லை.பாவமும் இல்லை.ஆனால் ஒதுக்கப்பட்டஏழைகளின் உணர்வுகளையும் தேவைகளையும் அறிந்துகொள்ளாததுதான் தவறு. "ஏழைகளே, நீங்கள் பேறுபெற்றவர்கள். ஏனெனில் இறையாட்சி உங்களுக்கு உரியதே' என்று கூறுவது சற்று முரணபாடாகத் தோன்றினாலும் வேதனையின் மத்தியில் உழலும் உள்ளங் களுக்கு ஆறுதலாக அமைகிறது. ஆகவே, நம்மிடம் உள்ளதில் ஏழைகளுடன் பகிர்வோம்.

காவலன்

உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்
களுக்கும் பார்சல் சேவைகளுக்கும்
MANOJ EXPRESS SERVICE
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field
இல.13, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
யாழ்.:
021 222 3916
0777 801038
கொழும்பு:
T.P.: 2390128
Fax: 2399650
Mob: 0777 517019

## சுதந்திரமான வாக்களிப்பை...

எனினும், குடாநாட்டில் இயல்பு வாழ்வு இன்னமும் ஏற்படவில்லை. இந்நிலையில், தேர்தல் அறிவிப்பு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தேர்தலுக்கூடாக தமிழ் மக்கள் தமது ஒன்றுபட்ட மன உணர்வுகளையும், அரசியல் அபிலாஷைகளையும் உலகறியச்செய்யக் காத்திருக்கிறார்கள். எமது மக்களின் அபிலாஷைகளையும் உலக அரங்கிற்கு எடுத்துச் செல்வதற்காக புலிகளின் பூரண ஆதரவுடன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் தேர்தலை எதிர்கொண்டுள்ளனர்.

இவர்களை ஆதரிப்பதன்மூலம் தமிழ்மக்களின் அரசியல் அபிலாஷைகளை உலகறியச் செய்ய தமிழ்மக்கள் தயாராக உள்ளனர்.

இதனால், தமிழ்மக்களின் மன உணர்வுகளின் உண்மைத் தன்மையை உலகறியச் செய்வதற்காகத் தமிழ்மக்கள் அனைவரும் சுதந்திரமாக வாக்களிக்கக்கூடிய சந்தர்ப்பம் உருவாக்கிக் கொடுக்கப்படவேண்டும். இதற்கு சர்வதேச நாடுகளின் பங்களிப்பு அவசியம். கடந்த காலங்களில் இடம்பெற்றதுபோல மக்களை வாக்களிக்க விடாது தடுக்கும் படையினரின் செயற்பாடுகள் நிறுத்தப்படவேண்டும்.

இவ்வாறு மக்கள் மீது திணிக்கப்படும் வாக்குரிமை மீறல்கள் அற்ற சூழ்நிலையில் வாக்கெடுப்பை நடத்தினால், தமிழ்மக்களின் மன உணர்வுகளை உலகறியச் செய்யும் சந்தர்ப்பம் உருவாகும்.

## புலிகளின்...

புலிகள் தமது முன்னரங்கக் காவல் நிலைகளைப் பின்னகர்த்தி சுமூகமாகத் தேர்தல் நடைபெறுவதற்கு உதவிசெய்ய முன்வந்திருக்கின்றமை மிகவும் வரவேற்கத்தக்க விடயம் என்று விடுதலைப் புலிகளைப் பாராட்டிய எரிக்சொல், இது குறித்துத் தேர்தல் ஆணையாளர் தாயானந்த திஸ்ஸநாயக்காவுடன் பேசவுள்ளதாகவும், சுதந்திரமாக வாக்கெடுப்பை நடாத்துவதற்குரிய ஏற்பாடுகளைச் செய் (இ-3,19,4,43)

அத்துடன், ஜனநாயக ரீதியாக மக்களுக்குள்ள வாக்குரிமைகளை தமிழீழ விடுதலைப் புலிகள் மதிக்கின்றனர். இவ்வுரிமைகளுக்குப் பங்கம் ஏற்படாதவாறு எமது செயற்பாடுகளும் அமையும். மக்களின் நன்மைகருதி தேர்தல் வாக்கெடுப்புக்களை நடத்துவதற்காக முகமாலைச் சோதனைச்சாவடிப்பகுதிகளில் உள்ள புலிகளின் முன்னரங்கக் காவல் நிலையைங்களைப் பின்னோக்கி நகர்த்தி ஒத்துழைப்பு வழங்கவுள்ளோம். இதனால், சர்வதேச தேர்தல் கண்காணிப்பளர்களின் உதவியுடன் இராணுவக் கெடுபிடிகள் அற்ற சுதந்திரமான வாக்கெடுப்பை நடத்தலாம் என்று இளம்பரிதி நோர்வேத் தரப்பிடம் கூறினார். (இ-19,43,3)

## எரிக்சொல்ஹெய்ம்...

தேர்தல் குறித்தும், விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட முன்னாள் மட்டு. அம்பாறை சிறப்பு தளபதி கருணா அம்மான் விவகாரம் குறித்தும் பேச்சு நடத்தப்படுமென்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணாவுடன் இலங்கை அரசாங்கம் எவ்விதமான தொடர்புகளையும் வைக்க வேண்டாமென்று தமிழ்ச்செல்வன் எரிக்சொல்ஹெய்ம் ஊடாக இலங்கை அரசைக் கோருவார் என்றும, உத்தியோக பூர்வமாக, தூதுவர் ஊடாக அரசுக்கு கடிதம் அனுப்படும என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (இ)

## அரசியல் யாப்புச்....

யாழ். அலுவலகத்தில் ஈ.பி.டி.பி - ஈ.பி.ஆர்.எல்.எப். கூட்டின் தேர்தல விஞ்ஞாபனத்தை வெளியிட்டு வைத்துப் பத்திரிகைகளுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்;

ஐக்கிய இலங்கைக்குள் சமாதான சகவாழ்வு அளிக்கும் எக்கட்சியுடனும் ஈ.பி.டி.பி. கூட்டுச்சேரும். ஜே.வி.பி. ஒரு பயங்கரவாதக் கட்சியல்ல. ஸ்ரீ.சு.கட்சி - ஜே.வி.பி. கூட்டுக்கு ஆதரவு வழங்குவோம். எனினும், அக்கட்சியின் முழுக் கொள்கையையும் நாம் ஏற்றுக்கொள்ளவில்லை. தமிழ் மக்களுக்கு எதிராக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கியதேசியக கட்சியும் மேற்கொண்ட இனரீதியான வன்முறைகளைக் காட்டிலும், ஜே.வி.பி. தமிழ்மக்களுக்கு எதிராக அப்படியொன்றும் செய்துவிடவில்லை. ஊடகங்களே அவ்வாறானதொரு மாயையை ஏற்படுத்துகின்றன.

இலங்கையின் சமாதான முன்னெடுப்புக்களில் அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் மட்டும் பேசித் தீர்வுகாண முடியாது. சம்பந்தப்பட்ட அனைவரும் பேசுவதன் மூலமே நிரந்தரத் தீர்வொன்றைக் காண முடியும்.

அரசினாலும், விடுதலைப் புலிகளினாலும் அமுல்படுத்தப்பட்டுள்ள யுத்தநிறுத்தம் தொடரும் என ஈ.பி.டி.பி. நம்பிக்கை கொண்டுள்ளது. இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று ஏற்படுவதையே நாம் விரும்புகின்றோம். அந்த வகையில், மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்ற கொள்கையின் அடிப்படையில் தீர்வுகாணப்படவேண்டும். இம்முறை இடம்பெறும் பொதுத் தேர்தலில் ஈ.பி.டி.பிக்கு 8முதல் 10 ஆசனங்கள்வரை கிடைக்கும். நாம் தேர்தலில் வெற்றி பெறும் பட்சத்தில் குடாநாட்டில் 10 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்குவோம் என்றார்.

இத்தேர்தல் விஞ்ஞாபன வெளியீட்டின்போது ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சிகளின் கூட்டைச் சேர்ந்த வேட்பாளர்களான கே.வி. குகேந்திரன், க.மணிபல்லவராஜன், சிவதாசன், மதனராஜா, சிவகுமார், திருமதி மகேஸ்வரி வேலாயுதம், சின்னபாலா உட்பட கட்சிகளின் பிரமுகர்கள் பலர் கலந்துகொண்டனர். (ச-5,4,43)

## மட்டக்களப்பில்...

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில இருந்து மார்ச் 3ஆம் திகதிக்குப் பின்னர் எதுவித முறைப்பாடுகளும் பதிவுசெய்யப்படவில்லை என மட்டக்களப்பு மாவட்டப் போர் நிறுத்தக்கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது. (ச)

## எரிக்சொல்-டக்ளஸ்...

கையின்போது தமக்கு ஏற்படக்கூடிய இடையூறுகள், முட்டுக்கட்டைகள் தொடர்பாகவும் நோர்வேத்தரப்புக்குத் தாம் சுட்டிக்காட்டியதாக ஈ.பி.டி.பி. வெளியிட்ட ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இச்சந்திப்பில் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ்பிரஸ்கர், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கொழும்பு அலுவலகப் பிரதிநிதி ஆகியோரும், ஈ.பி.டி.பி. சார்பில் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கே.வி.குகேந்திரன், முன்னாள் எம்.பிகளான எஸ்.சிவதாசன், ந.மதனராசா ஆகியோரும் கலந்துகொண்டனர். (இ)

வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளிடமிருந்து
WESTERN UNION MONEY TRANSFER
மூலம்
சில நிமிட நேரத்தில் உங்கள் கைகளில் பணம் கிடைக்க
எம்மிடம் நாடுங்கள்
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303 K.K.S. வீதி, யாழ்ப்பாணம
T.P : 021 222 5392
Fax : 222 3214
E.mail : smskr@eureka.lk
சிவன் கோவில் வீதி, காரைநகர்
T.P : 0602212472

## வழங்கல் கட்டளை பெறுமாறு அறிவுறுத்து

யாழ். மாவட்ட ப.நோ.கூ சங்கங்களினால் மேற்கொள்ளப்படும் உலா உணவு விநியோகத்தை ஓரிரு தினங்களில் மேற்கொள்ளுமாறு யாழ். செயலக திட்டப்பணிப்பாளர் பி. சுந்தரம்பிள்ளை கேட்டுள்ளார்.

இதற்கான வழங்கல் கட்டளைகளை இன்றும், நாளையும் யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியில் பெற்றுக்கொள்ளலாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

விற்பனைக்கு
ஜப்பான் சொனி ரீவி, நஷனல் 511 டெக் 9500/-ரூபா.
396, நாவலர் வீதி,
(முன்னைய உதயன் பணிமனை ஒழுங்கை)
யாழ்ப்பாணம்.
பி.ப. 6 மணிக்குப் பின்னர் தினமும் தொடர்பு கொள்ளவும்.

பதவி வெற்றிடம்
கணனிப் பக்க அமைப்பாளர்கள்
✡ அனுபவம் நிறைந்த கணனி பக்க அமைப்பாளர்கள் தேவை. ஆண், பெண் இரு பாலாரும் விண்ணப்பிக்க முடியும். தகுதியானவர்கள் சுய விபரம் அடங்கிய விண்ணபத்துடன் நேரில் வரவும்.
நிர்வாக உத்தியோகத்தர்
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்.

நீதிக்கு இது ஒரு போராட்டம் இதை நிச்சயம் தமிழினம் வரவேற்கும்

வீ.ஆனந்தசங்கரி
(முன்னாள் பா.உ. யாழ்ப்பாணம்)
முழுமையான அர்ப்பணிப்புடன் செயற்படும் தலைவன்
☼ தனிப்பட்ட தன் சொந்த பொறுப்புக்களை ஒதுக்கிவிட்டு.......
☼ தமிழினத்தின் தன்னாட்சி உரிமையினை வென்றெடுக்க..........
இதனையே தனது முழுநோக்காகக் கொண்டு செயற்படும் தலைவன்

செ.பத்மநாதன்
(வல்வெட்டித்துறை முன்னாள் நகரசபை உறுப்பினர்)
வீ.ஆனந்தசங்கரி (தலைவர்-தமிழர் விடுதலைக் கூட்டணி)
தலைமையிலான
சுயேச்சைக் குழு 01
முழுமையான ஆதரவளித்து இவ் அணியை வெல்லவைப்போம்
குறிப்பு:- எக்காரணம் கொண்டும் எனது தலைமையிலான சுயேச்சைக்குழு - 1 இத்தேர்தலில் இருந்து விலகிக்கொள்ளமாட்டார்கள் என்பதை உறுதியுடன் தெரிவிக்கின்றேன். தயவுசெய்து வீண் வதந்திகளை நம்பவேண்டாம்.
(சி-7421)